சர்வதேச நாய்கள் தின சிறப்பிதழ்

வியாழக்கிழமை 25 ஆகஸ்ட் 2022

# தமிழருவி



சர்வதேச நாய்கள் தினம் ஆகஸ்ட் 26

அருவி: 02 | சாரல்: 32

தமிழின் தலைநிமிர்வு



## நாய்களுக்கு ஒரு தாய்மடி!

## வழியெங்கும் விழிகளாகும் நாய்கள்!

## கடைசி தீபாவளி!

## பிரியமான பீர்ரூட்டுடன்...

ஆகஸ்ட் 30 சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினம்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களில் காணாமல் போன பெண்களின் எதிர்காலம்!

## கண்துடைப்பிற்காய் கையாளப்படும் காணாமல் போனோர் விவகாரம்!

# ரணிலின் புதிய அமைச்சரவை அடுத்த வாரம் பதவியேற்கும்?

## பொதுஜன பெரமுனவுக்கு மட்டும் அமைச்சா பதவிகள்



தற்போதுள்ள தற்காலிக அமைச்சரவைக்கு பதிலாக, புதிய அமைச்சரவையை இடைக்கால வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டதன் பின்னர் நியமிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சர்வகட்சி வேலைத்திட்டத்தின் கீழ் இந்த புதிய அமைச்சரவை நியமிக்கப்படுவதற்கான அதிக வாய்ப்புகள் உள்ளதாக அரசியல் வட்டார தகவல்கள் குறிப்பிடுகின்றன.

திருத்தப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்டமூலம் எதிர்வரும் 30ஆம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதுடன், அதன் பின்னர் இந்த புதிய அமைச்சரவையை நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சர்வகட்சி அரசாங்கம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ள போதிலும், இதுவரையில் எவ்வித இறுதித் தீர்மானம் எட்டப்படவில்லை.

நியமிக்கப்படவுள்ள புதிய அமைச்சரவையில் தற்போது ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் அமைச்சுப் பதவிகளை வகிக்கும் அமைச்சர்கள் பலர் உள்வாங்கப்பட்டுள்ளதாக அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதான எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள்சக்தி, ஜே.வி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பன அமைச்சரவையில் இடம்பெறுவதற்கு மறுத்துவிட்டன. இருந்தபோதிலும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் அரசுக்கு ஆதரவளிப்பதாகவும் அவை தெரிவித்துள்ளன.

# பயங்கரவாதத் தடைச் சட்டம் மீண்டும் அமலாக்கப்படுவது விசனத்துக்குரியது

## சர்வதேச ராஜதந்திரிகள் மனித உரிமைகள் அமைப்புகள் கண்டனம்

பயங்கரவாத தடைச் சட்டமானது பெரும்பாலும் ஜனநாயக கோட்பாடுகளுக்கும் மனித உரிமைகளுக்கும் உரியவாறு மதிப்பளிக்காத ஒரு சட்டமாகவே கருதப்படுவதாக சுட்டிக்காட்டி இருக்கும் சர்வதேச ராஜதந்திரிகள் மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள், இலங்கை அரசாங்கம் அந்த சட்டத்தை மீள பயன்படுத்துவது கடும் விசனத்துக்குரியது என சுட்டிக்காட்டி இருக்கின்றார்கள்

இப்படியும் தொடர்பில் இலங்கையில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலய twitter பக்கத்தில், பயங்கரவாத தடைச்சட்டத்தின் பயன்பாடு தொடரில் தீவிர கரிசனை வெளிப்படுத்தப்பட்டு இருப்பதுடன், பயங்கரமாத தடைச் சட்டம் ஆனது மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் அமையவில்லை. எனவே உரிய அதிகாரிகள் அதன் பயன்பாட்டை இடைநிறுத்துவதற்கான கடப்பாட்டின் பிரகாரம் செயல்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

இதனை விட கனடா, நோர்வே ஆகிய நாடுகளும் சர்வதேச மனித மன்னிப்பு சபை போன்றனவும் பயங்கரவாத தடைச் சட்டம் மீண்டும் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதையிட்டு தமது வன்மையான கண்டனத்தையும் அக்கறையை வெளிப்படுத்தி உள்ளனன.

# அரசாங்கம் அனைத்துக் கட்சியாக இருக்க முன்மொழிகிறது ஆனால் அனைவரையும் விழுங்கும் அரசாங்கமாக உள்ளது!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

அரசாங்கம் அனைத்துக்கட்சி வேலைத் திட்டத்தை முன்வைத்தாலும் உண்மையில் அரசாங்கம் அனைவரையும் விழுங்கும் வேலைத்திட்டத்தையே நடைமுறைப்படுத்துவதாகவும், எந்தப் பதவியை வழங்கினாலும் மக்கள் போராட்டத்தை நசுக்கும் அரசாங்கத்துடன் இணையப்போவதில்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சகல பேதங்களையும் மறந்து கருத்துக்களை ஒரு கணம் ஒதுக்கி வைத்து அரச அடக்குமுறையை தோல்வியடையச் செய்வதற்கு ஒன்றிணைவோம் என அனைத்து சக்திகளுக்கும் அழைப்பு விடுத்த எதிர்க்கட்சித் தலைவர், மஹிந்த ராஜபக்ஷ தனது பிரியாவிடை நிகழ்வில் ஆரம்பித்த பயங்கரவாத பாணியிலான



அடக்குமுறையே நடைமுறைப்படுத்தப் படுவதாகவும் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி அரசாங்கம் இந்நாட்டு பிரஜைகளின் உரிமைகளை மீறுவதாகவும், மக்களின் உரிமைகளை மீறவோ, அழிக்கவோ எவருக்கும் உரிமை இல்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அரசாங்கம் மிகவும் கொடூரமான முறையில் அடக்குமுறையை தனது ஆயுதமாக்கிய நிலையில், அடக்குமுறைக்கு எதிரான மக்கள் பேரணி முன்னெடுப்பு நேற்று நடைபெற்றது. அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புகள், கலைஞர்கள் மற்றும் வெகுஜன அமைப்புகளின் பங்குபற்றுதலுடன் இந்நிகழ்வு இலங்கை மன்றத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரித்தானிய, கனேடிய, அவுஸ்திரேலிய மற்றும் தென்னாபிரிக்க தூதரகங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டதுடன், எதிர்க்கட்சியின் பிரதான அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டனர்.

# பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கான எரிபொருள் மீள விநியோகம்



கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு விமான எரிபொருட்களை கொண்டு செல்லும் நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இரண்டு மாதங்களுக்குப் பின்னர் ரயில் மூலம் விமான எரிபொருட்களை கொண்டு செல்லப்படுகின்றன.

விமான எரிபொருள் கையிருப்பு இல்லாமையால், கடந்த காலங்களில் விமான நிலையத்திற்கு எரிபொருளைக் கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனினும் கச்சாய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டு சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக விமான எரிபொருளின் இருப்பு தற்போது கூட்டுத்தாபனத்தின் வசம் உள்ளது.

இதனால் எரிபொருள் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, கொலன்னாவ பெற்றோலிய முனையத்திலிருந்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு நாளொன்றுக்கு நான்கு தடவைகள் 350,000 லீற்றர் விமான எரிபொருள், புகையிரதத்தில் கொண்டு செல்லப்படுவதாக குறித்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

# கோட்டாபய எப்போது இலங்கை திரும்புவார்?

## பிரதமர் தினேஷ் குணவர்த்தன பதில்

'முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச எப்போது நாடு திரும்புவார் என்று எனக்குத் தெரியாது. நாடு திரும்புவதா? இல்லையா? என்பது தொடர்பில் அவரே முடிவு எடுக்க வேண்டும்' என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'கோட்டாபய ராஜபக்ச தனது சுயவிருப்பின் பிரகாரம் நாட்டை விட்டு வெளியேறி ஜனாதிபதி பதவியை இராஜிநாமா செய்திருந்தார். தற்போது அவர் முன்னாள் ஜனாதிபதி. முன்னாள் ஜனாதிபதிக்குரிய வரப்பிரசாதங்கள் அவருக்கு உண்டு.



இந்நிலையில், அவர் எப்போது நாடு திரும்புவார் என்று எனக்குத் தெரியாது. நாடு திரும்புவதா? இல்லையா? என்பது தொடர்பில் அவரே முடிவு எடுக்க வேண்டும்.

அவர் நாட்டுக்கு வந்தால் அரசியலில் ஈடுபடுவரா? இல்லையா? என்பது தொடர்பில் அவர்தான் தீர்மானம் எடுக்க வேண்டும்' என்றும் பிரதமா் தினேஷ் குணவா்த்தன தெரிவித்தார்.

கோட்டாபய ராஜபக்ச நேற்று 24 ஆம் திகதி இலங்கை திரும்புவாா் என முதலில் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், பின்னா் அவா் இரண்டு வாரங்களின் பின்னரே நாடு திரும்புவாா் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நடத்திய தொலைபேசி உரையாடலையடுத்தே அவரது விஜயம் ஒத்திவைக்கப்பட்டது.

# கோட்டாபய வீட்டுக்கு கடும் பாதுகாப்பு; அதிரடிப்படையினர் அதிகளவு குவிப்பு



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மிரிஹான வீட்டுக்கான பாதுகாப்பு மேலும் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவரது வீட்டுக்கு ஏற்கனவே பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்ட படையினரின் எண்ணிக்கையை விட, தற்போது அதிகளவான அதிரடிப் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ புதன்கிழமை இலங்கை திரும்புவார் என முன்னர் அறிவித்திருந்த போதிலும், அவரது வருகை இரண்டு வாரங்கள் தாமதமாகும் என்ற தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசிய பின்னரே அவா் தனது வருகையை தாமதப்படுத்தியதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இருந்தபோதிலும் நேற்று புதன்கிழமை தினம் அதிகளவு அதிரடிப்படையினா் குவிக்கப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டமைக்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை.

# மே 09 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறை சம்பவங்கள் குறித்த விசாரணை நிறைவு



மே 09ஆம் திகதி நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் விசாரணைகள் நிறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சுமார் 35 அதிகாரிகளிடம் சாட்சிகளை பதிவு செய்துள்ளதாக குறித்த குழு அறிவித்துள்ளது.

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா, பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோன் ஆகியோரும் இவர்களுள் அடங்குகின்றனர்.

கடந்த மே மாதம் 9ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை தடுப்பதில் பாதுகாப்புப் படையினர் ஏதேனும் தவறிழைத்துள்ளார்களா என்பது குறித்தும் இந்த குழு ஆராய்கின்றது. இந்த அறிக்கை மிக விரைவில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்படவுள்ளது.

மே 9 ஆம் திகதி அலரி மாளிகையில் அப்போது பிரதமராக இருந்த மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவாக இடம்பெற்ற கூட்டம் ஒன்றைத் தொடா்ந்து வெளியே வந்த மகிந்தவின் ஆதரவாளா்கள்காலிமுகத்திடலிலும், அலரி மாளிகை முன்பாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவா்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள். இதன் மூலம் பெரும் கவலரம் நாட்டில் வெடித்தது.

இதற்கு பதிலடியாக பொது ஜன பெரமுன ஆதரவாளா்கள் அவா்களுடைய இல்லங்கள் என்பன ஆர்ப்பாட்டக்காரா்களால் தாக்கப்பட்டன. பலருடைய இல்லங்கள் எரிக்கப்பட்டன. இரண்டு தினங்களாகத் தொடா்ந்த இந்த வன்முறைகள் தொடா்பாகவே விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.




**செய்தி:-**

அரச சேவையில் எந்தவேலையும் செய்யாமல் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் உள்ளனர்.

**எம். எம்.பி. கே. மாயாதுன்னை**
**செயலாளர்**

பொதுநிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

மேலகாரிகளிட வீட்டுவேலைகளை செஞ்சு குடுத்து சம்பளம் வாங்கிருப்பாங்களோ?



## பயிர்ச்செய்கைக்கு பாதிப்பை விளைவிக்கும் விலங்குகள் பட்டியலில் இருந்து யானை நீக்கம்!

பயிர்ச்செய்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விலங்குகளின் பட்டியலில் இருந்து, காட்டு யானைகளை நீக்க நடவடிக்கை எடுக்குமாறு, விவசாயம், வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர, அதிகாரிகளை அறிவுறுத்தியுள்ளார்.

பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் விலங்குகளிடையே, காட்டு யானைகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதம் 20 சதவீதம் என்ற அளவானதாகும் என வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சுமார் 46 சதவீத சேதங்கள், குரங்கு, பன்றி, மயில், காட்டுப் பன்றி மற்றும் காட்டு அணில் என்பனவற்றால் ஏற்படுவதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## மக்கள் அத்தியாவசிய உணவுப் பொருட்களை சேமிக்கவேண்டும்!

### ஜனாதிபதி வேண்டுகோள்



பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீண்டெழ இரண்டு ஆண்டுகளாவது தேவை. அதிலும் எதிர்வரும் ஓராண்டு எமக்கு மிகப் பெரிய சவாலான ஆண்டாகும். இந்த நிலையில் நாட்டு மக்கள் அநாவசியச் செலவுகளைத் தவிர்த்து அத்தியாவசிய உணவுப் பொருள்களை சேமித்து வைக்கவேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்தார்.

இலங்கைஅரசால் 300இற்கும் மேற்பட்ட பொருள்களுக்கு இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மக்கள் அத்தியாவசிய உணவுப் பொருள்களையாவது பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்த 300 பொருள்களின் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களின் பசியையாவது போக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் தான் நான் பிரதமர் பதவியை (மே மாதம்) பொறுப்பேற்றேன். அதன் பின்னர் நாடு எதிர்கொண்டுள்ள மோசமான நிலைமையைக் கருத்தில்கொண்டு ஜனாதிபதி தெரிவில் நான் போட்டியிட்டேன். மக்களின் பிரதிநிதிகள் ஒன்றுகூடியிருக்கும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்துடன் ஜனாதிபதியாகத் தெரிவாகினேன். எனினும், மிகவும் சவால்மிக்க காலகட்டத்தில்தான் இந்த அதி உயர் பதவியில் நான் இருக்கின்றேன்.

பொருளாதார ரீதியில் மக்கள் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நான் முதலில் தீர்வு கண்டே தீருவேன். அதன் பின்னர் தேசிய ரீதியிலான ஒவ்வொரு பிரச்சினைகளுக்கும் அனைத்துக் கட்சிகளின் கலந்தாய்வுடன் தீர்வுக்கான எனது பயணம் தொடரும் - என்றார்.

## ரஷ்யாவிற்கு அஞ்சல் பொருட்களை அனுப்பும் பணி இன்று முதல் மீண்டும் ஆரம்பம்

ரஷ்யாவிற்கு அஞ்சல் பொருட்களை அனுப்பும் பணி இன்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவிற்கு அனுப்பப்படும் தபால் பொருட்களை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் இன்று (25) முதல் தபால் திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் என அஞ்சல்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

விமானப் போக்குவரத்துக் சிக்கல் காரணமாக, ரஷ்யாவுக்கான அஞ்சல் பொருட்களை அனுப்பும் செயற்பாடு தற்காலிகமாக அஞ்சல் திணைக்களத்தால் இடைநிறுத்தப்பட்டது.






தேசிய மாவீரன் பண்டார வன்னியனின் 219 ஞாபகார்த்த விழாவினை முன்னிட்டு வவுனியா நகரசபையினரினால் இன்று நகர மத்தியில் தேசிய மாவீரன் பண்டாரவன்னியன் சதுக்கம் எனும் பெயர்ப்பலகை திறந்து வைக்கப்பட்டுள்ளது

## கோட்டகலையில் தொழிலாளர்- நிர்வாகம் முறுகல் பேச்சுவார்த்தை மூலம் முடிவுக்கு வந்தது!

கொட்டகலை ரொசிட்டா தோட்டத்தில் தொழிலாளர்களுக்கும், தோட்ட நிர்வாகத்திற்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலைமை சமரச பேச்சுவார்த்தையின் மூலம் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக குறித்த தோட்டத்தில் பல்வேறு கெடுபிடிகளை தோட்ட நிர்வாகம் தொழிலாளர்கள் மீது நடத்தி வந்துள்ளது.

இதனையடுத்து, இப்பிரச்சினை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் அவர்களின் தலையீட்டால் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

தொழிலாளர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்த எம்.பி. ஜீவன் தொண்டமான், உடனடியாக கொட்டகலை ரொசிட்டா தோட்ட காரியாலயத்திற்கு நேரடி விஜயம் மேற்கொண்டு தோட்ட முகாமையாளருடன், தொழிலாளர்களுக்கு தோட்ட நிர்வாகத்தால் நடத்தப்படும் கெடுபிடிகளை சுட்டிக்காட்டி கலந்துரையாடினார். அதன்பிறகு, இதனை ஏற்றுக்கொண்ட தோட்டநிர்வாகம், ஒரு சுமூகமான நிலைமைக்கு வந்தது. இதனையடுத்து, பணிபகிஷ்கரிப்பில் ஈடுப்பட்ட தோட்ட தொழிலாளர்கள் வழமைக்கு திரும்பினர்.

இதன்போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நிதி செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும், மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஏ.பி சக்திவேல், கொட்டகலை பிரதேச சபையின் உப தலைவர் பாலசுப்பிரமணியம், தொழிற்சங்க பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துக்கொண்டனர்.

## அரசசேவையில் திட்டமிடப்படாத ஆட்சேர்ப்பால் அரசுக்கு பெரும் நெருக்கடி

குறிப்பிட்ட பணி ஒதுக்கீடு இல்லாமல் அரச ஊழியர்களை பராமரிப்பதில் சிக்கல் நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே. மாயாதுன்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

உரிய முறைக்கு புறம்பாக அரச சேவைக்கான பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதன் ஊடாக அரச சேவையில் மிகை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தமிழ் ஓலை

மின்னஞ்சல்: aruvitamil812@gmail.com
வாட்ஸ் ஆப் இலக்கம்: 0094 768 320 733

## தேசிய பாதுகாப்புச் சட்டம்
## பழைய மொந்தையில் புதிய கள்!

**அரசாங்கம்** பயங்கரவாத தடைச்சட்டத்தை மீண்டும் அமுல்படுத்துவதற்கு எதிராக மேற்குலகு தனது போர்க்கொடியை உயர்த்தியுள்ளது. சர்வதேச மன்னிப்பு சபை உள்ளிட்ட மேற்குல அமைப்புகள் இது பொதுமக்களின் அடிப்படை உரிமைகள் மீது பிரயோகிக்கப்படும் வன்முறை எனச் சுட்டிக்காட்டியுள்ளன.

இந்தப் பயங்கரவாத சட்டத்தின் சரத்துகள் மூன்று தசாப்தங்களாக தொடர்ந்த உள்நாட்டுப் போரில் தமிழ் மக்களுக்கு அத்துப்படியானவை. காரணமற்ற கைதுகள், வலிந்து காணாமல் ஆக்கப்படுதல், அரசியல் கைதிகளின் முடிவற்ற சிறை வாழ்க்கை ஆகிய துன்பியல் படலங்களின் பிதாமகனே இந்தப் பயங்கரவாத தடைச்சட்டம். உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்து பல ஆண்டுகள் கடந்த பின்பும் இந்த சட்டத்தின் அவசியம் என்னவென்பது தொடர்பில் பெரும்பான்மை சிங்கள சமூகம் தன்னை சுயபரிசோதனை செய்து கொள்ளவேண்டிய தீர்க்கமான தருணம் இதுவாகும்.

இதேவேளை பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு பதிலாக தேசிய பாதுகாப்பு சட்டத்தை அமுல்படுத்த உள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். அதன் உள்ளடக்கம் என்ன அதில் அடங்கும் சரத்துகள் என்ன என்பதை கேள்விக்குட்படுத்தும் உரிமையும், தகவலறியும் உரிமையும் சிவில் தரப்புக்கு உள்ளதா என்பது இங்கு கேள்விக்குட்படுத்த வேண்டியதொன்று.

மேலும் இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம் இரண்டாயிரம் நாட்களைக்கடந்து அனுமார் வாலாக நீளும் இத்தருணம் நாம் அவசரகாலச்சட்டம் மற்றும் பயங்கரவாத சட்டத்தினால் காலம்காலமாக பொதுமக்கள் சுமந்த சிலுவைகளை இரைமீட்டிபார்க்கவேண்டியுள்ளது.

மேலும் இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம் இரண்டாயிரம் நாட்களைக்கடந்து அனுமார் வாலாக நீளும் இத்தருணம் நாம் அவசரகாலச்சட்டம் மற்றும் பயங்கரவாத சட்டத்தினால் காலம்காலமாக பொதுமக்கள் சுமந்த சிலுவைகளை இரைமீட்டிபார்க்கவேண்டியுள்ளது.

நன்றி: தமிழ் மிரர்



# பூஜ்ஜியத்தில் இருந்து ராஜ்யம்!
## அரைக்கிணறு தாண்டியபின் அடுத்தது என்ன?

> ‘அரகலய’ போராட்டம் பெருமளவுக்கு ஒடுக்கப்பட்டுவிட்டாலும், அது முழுமையாக இல்லாமல் போகவில்லை. அது உயிர்துடிப்புடன் இல்லாவிட்டாலும், அது உயிருடன்தான் உள்ளது. ரணிலும் அதனைத்தான் விரும்புகின்றார். ராஜபக்சக்கள் அவர்களிடமுள்ள பாராளுமன்றப் பலத்தைப் பயன்படுத்தி தனக்கு எதிராகச் செயற்படுவதற்கு முற்பட்டால் மீண்டும் அரகலய தூண்டிவிடுவதற்கான மறைமுகமான திட்டம் ஒன்று ரணிலிடம் இருப்பதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கருதுகின்றன.

**பவித்திரா**

**நெருக்கடியான** ஒருகாலகட்டத்தில் நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க அவருக்கு வழங்கப்பட்டுள்ள பதவி காலத்தை பூர்த்தி செய்து அடுத்த பதவி காலத்திற்கும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாக வருவதற்கு தேவையான வியூகங்களை வகுத்து செயல்படுவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கோட்டாபய ராஜபக்ஷ மிகுதியாக வைத்து சென்றுள்ள இரண்டரை வருடங்களுக்கான பதவிக்காலத்திற்காகவே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருந்தார். இந்த இரண்டரை வருடங்களை அவர் பூர்த்தி செய்வரா என்ற கேள்வி ஆரம்பத்தில் எழுந்திருந்தது. அதற்கு பல காரணங்கள் இருக்கின்றன.

முதலாவது: பாராளுமன்றத்தில் ஆதரவற்ற நிலை – அதாவது அவரது கட்சியில் ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினர்தான். பாராளுமன்றத்தில் ஆதரவு இல்லாமல் ஜனாதிபதி தன்னுடைய பதவி காலத்தை பூர்த்தி செய்வது கடினமானதாக இருக்கும் என்பது அனைவருக்கும் தெரியும்.

இரண்டாவது: காலிமுகத் திடல் போராட்டக்காரர்கள் ரணிலுக்கு எதிரான போராட்டத்தையும் தீவிரப்படுத்தியிருந்தார்கள்.

மூன்றாவது: நாட்டின் பொருளாதார நிலைமை உடனடியாகச் சீரடையக்கூடிய ஒன்றாகக் காணப்பட்டிருக்கவில்லை. இதனால் மக்களின் போராட்டங்கள் தொடரும் என்ற ஒரு எதிர்பார்ப்பு காணப்பட்டது.

நான்காவது: பிராந்திய சர்வதேச ரீதியான நெருக்கடிகள்.

இவை காரணமாக கடுமையான நெருக்கடிக்கு உள்ளாகும் ரணில் விக்கிரமசிங்க அவருக்குக் கிடைத்த பதவிக்காலத்தை முழுமையாகப் பூர்த்திசெய்யக் கூடியவராக இருப்பாரா என்ற கேள்வி பல்வேறு தரப்பினரால் முன்வைக்கப்பட்டது.

ரணில் ஜனாதிபதியாகப் பதவியேற்றபோது, ‘‘அவர் மக்கள் ஆணையைப் பெறாத ஒருவர். அவர் பதவி விலகி புதிய தேர்தலை நடத்தவேண்டும்’’ என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. என்பன கோரிக்கை முன்வைத்திருந்தன. ஆனால், பதவியேற்று சுமார் ஒரு மாத காலத்துக்குள்ளாகவே இந்த நிலைமைகளில் மாற்றங்களைக் கொண்டுவருவதில் ரணில் வெற்றிபெற்றிருக்கின்றார்.

மக்களின் ஆணையைப் பெறாமல் வந்தவர் என்ற கருத்துக்கு அப்போதே ரணில் பதிலளித்திருந்தார்.

இரண்டாம் உலகப் போரின்பின்னர் நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் பிரித்தானியாவில் நடைபெற்றதை அவர் உதாரணமாகக் கூறியிருந்தார்.

இப்போது, தனது பதவிக்காலத்தைப் பூர்த்தி செய்வதுடன் மட்டும் நின்றுவிடாமல் – மற்றொரு தவணைக்கு அதாவது 2024 இல் தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் ஜனாதிபதியாவதற்கான உபாயம் ஒன்றையும் அவர் வகுத்துச் செயற்படுகின்றார் என்பதை உணரமுடிகின்றது.

பாராளுமன்றத்தில் தனது ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரேயொரு ஆசனம் மட்டும் உள்ளநிலையில், அரசாங்கத்தை நடத்துவதற்கு ரணில் தடுமாறுவார் எனச் சொல்லப்பட்ட போதிலும், பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் அரசாங்கத்தை ஸ்திரமான முறையில் கொண்டு செல்ல முடியும் என்பதை ரணில் இந்த ஒரு மாத காலத்தில் உணர்த்தியிருக்கின்றார். இது பரஸ்பர ‘தேவை’யின் அடிப்படையிலான ஒரு செயற்பாடாகும்.

‘அரகலய’ எனப்படும் மக்கள் போராட்டத்தினால் உருக்குலைந்து போனது ராஜபக்சக்களின் அரசியல்தான். அத்துடன் பொதுஜன பெரமுனையும் இதனால் பாரிய பின்னடைவைச் சந்தித்தது. இந்த நிலையில் சில காலத்துக்கு தமது இருப்பைப் பாதுகாப்பதற்கு உதவக்கூடியவராக ரணில் இருப்பார் என ராஜபக்சக்கள் சரியாகத்தான் மதிப்பிட்டிருந்தார்கள்.



மறுபுறத்தில் கடந்த பொதுத்தேர்தலில் ஒரேயொரு ஆசனத்துடன் படுதோல்வியைச் சந்தித்த ரணிலுக்கும், அவரது கட்சிக்கும் புத்துயிர் கொடுப்பதற்கான சந்தர்ப்பமாகவும் இது அமைந்தது. அவ்வாறான ஒரு சந்தர்ப்பம் கிடைக்காது போயிருந்தால் ரணிலின் அரசியல் அஸ்தமனமாகியிருக்கும்.

ஆக, இரண்டு தரப்புக்களுக்குமே ஒருவரை ஒருவர் ஆதரிக்கவேண்டிய பரஸ்பர தேவை உள்ளது. அதனால் முரண்பாடுகள் உருவானாலும் புரிந்துணர்வின் அடிப்படையில் அதனைத் தீர்த்துக்கொள்ளக்கூடியவர்களாகவே ரணிலும் ராஜபக்சக்களும் உள்ளார்கள். இந்த உறவு முறியுமாக இருந்தால் இருதரப்பினரது அரசியல் எதிர்காலத்துக்கும் அது சமாதி கட்டுவதாக அமைந்துவிடும்.

அரகலிய போராட்டத்தினால் தமது கட்சிக்கான மக்கள் செல்வாக்கு எந்தளவுக்கு வீழ்ச்சியடைந்திருக்கின்றது

மிகுதி 16 ஆம் பக்கத்தில்...

# வரலாறு காணாத வறட்சியைச் சந்திக்கும் சீனா!



சீனாவில் வரலாறு காணாத வகையில் வெப்பத்தின் தாக்கம் அதிகரித்துள்ளது.

சீனாவின் தென்மேற்குப் பகுதியில் செப்டம்பர் மாதம் வரை அதிக வெப்பம் நிலவும் என கணிக்கப்பட்டுள்ளதால், சீனாவில் நாடு தழுவிய வறட்சி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சீனாவில் நிலவும் அதிக வெப்பம் காரணமாக, தொடர்ந்து 10-வது நாளாக சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சிவப்பு எச்சரிக்கை என்பது அந்நாட்டில் பயன்படுத்தப்படும் 4 அடுக்கு வானிலை எச்சரிக்கை முறையில், அதிகபட்ச எச்சரிக்கை ஆகும்.

இந்த வரலாறு காணாத வெப்பம் காரணமாக, சீனாவின் ஹூபேய் மாகாணத்தில் உள்ள ஆசியாவிலேயே மிகப்பெரிய நதியான யாங்சே நதி வறண்டு போயுள்ளது. பெய்ஜிங்கில் உள்ள சீனாவின் தேசிய வானிலை மையத்தின் தகவலின் படி, கடந்த ஜூன் 13-ம் தேதி முதல் அதிக வெப்பம் நிலவுகிறது.

மேலும், இதற்கு முன்னதாக, கடந்த 2013-ம் ஆண்டு சீனாவில் தொடர்ந்து 62 நாட்களுக்கு வெப்ப அலைகள் நிலவியது. ஆனால், இப்போது அதனை விடவும் அதிகமாக தொடர்ந்து 64 நாட்களாக வெப்ப அலை நிலவுகிறது.

இந்த வறட்சியால் சீனாவின் நீர் மின்சார உற்பத்தித் திறன் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. முக்கிய ஆறுகளின் நீர்வரத்து 20 முதல் 50% வரை குறைவாக இருப்பதால், சிச்சுவான் மாகாணத்தில் நீர் மின்சார உற்பத்தி வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக 900 மில்லியன் கிலோ வாட்-ஆக இருந்த தினசரி நீர் மின்சார உற்பத்தி தற்போது 51% குறைந்து 440 மில்லியன் கிலோ வாட்-ஆக உள்ளது.

மேலும், சீனாவின் தென்மேற்குப் பகுதியில் உள்ள 34 மாகாணங்களில் உள்ள 66 ஆறுகள் வறண்டுள்ளன. தென்சீனாவின் மழைப்பொழிவு வழக்கத்தை விட 60% குறைந்துள்ளது. தொடர்ச்சியான அதிக வெப்பநிலை மற்றும் மழையின்மை காரணமாக யாங்சே நதிப் படுகையின் பெரும்பாலான பகுதிகளில் அடுத்த 10 நாட்களில் வறட்சி இன்னும் மோசமடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் மொத்த தானிய உற்பத்தியில் 75% இலையுதிர்கால அறுவடையின்போது தான் பெறப்படும் என்பதால், இந்த வறட்சியின் தாக்கம் குறித்து பொருளாதார வல்லுநர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# புருனே நாட்டில் அதிகரிக்கும் சைபர் தாக்குதல்கள்!



புருனே நாட்டில் அண்மைக் காலமாக சைபர் எனப்படும் இணைய வழி தாக்குதல்கள் அதிகரித்து வருவதாகவும் இதன் மூலம் பல முக்கியமான இணைய வசதிகள் முற்றிலும் செயலிழந்து போய்க் கொண்டிருப்பதாகவும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் தாக்காபுல் என்னும் தனியார் நிறுவனம் மேற்படி இணைய தாக்குதல்களை முறியடிப்பதற்கான புதிய செயலிகளைக் கண்டு பிடிப்பதற்கான முதலீடுகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2035ம்ஆண்டுக்குள் சுமார் 10.5 ரில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியிலான நிதியை முதலீடு செய்து மேற்படி சைபர் தாக்குதல்களில் இருந்து முற்றுமான விடுதலையை பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளதாக தாக்காபுல் நிறுவன அதிகாரி தெரிவித்திருக்கின்றார்.

கடந்த 2020ம் ஆண்டு சைபர் தாக்குதல்களினால் புருனே நாட்டிற்கு சுமார் 56 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியிலான நஷ்டம் ஏற்பட்டிருந்தமை சுட்டிக் காட்டப்பட்டது.

அதேவேளை கடந்த 2021ம் ஆண்டு 1,862 முக்கிய பதிவுத் தரவுகள் திருடப்பட்டுள்ளதாகவும் அவை இணைய சேமிப்பகத்தில் இருந்து அழிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அவுஸ்திரேலியாவில் நகருக்குள் புகுந்து அட்டகாசம் புரியும் கங்காருகள்

## பொல்லுகளுடன் நடமாடும் மக்கள்!

அவுஸ்திரேலிய நகரமொன்றில் குடியிருப்புப் பகுதிகளுக்கு அருகில் கங்காருகள் புகுந்து மனிதர்களை தாக்குவதால், அந்நகரிலுள்ள மக்கள் பீதியடைந்துள்ளனர்.

குறிப்பாக, குயின்ஸ்லாந்து மாநிலத்தின் மாரூம் எனும் சிறிய நகரில் அண்மைக்காலமாக கங்காருகளின் தாக்குதல் அதிகரித்துள்ளதாக அங்குள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

பூங் காக்கள் போன்ற இடங்களில் கங்காருகள் அதிக எண்ணிக்கையில் திரிகின்றன. சிலவேளைகளில் மனிதர்களைக் கண்டால் அவர்களை கங்காருகள் தாக்குகின்றன.



அண்மையில், காங்காரு நடத்திய தாக்குதலில் 67 வயதான பெண்ணொருவரின் கால் முறிந்துள்ளது.

இந்நிலையில், மக்கள் மாலைவேளையில் நடைபயிற்சிக்கு செல்வதற்கோ மீன்பிடிக்கச் செல்வதற்கோ முடியாத நிலையில் உள்ளனராம். மேலும் காங்காருகளின் தாக்குதல்களிலிருந்து தப்புவதற்காக உள்ளூர் மக்கள் பொல்லுகளை ஏந்தியவாறு நடமாடுகின்றனர்.

புற்களை உண்பதற்காக கங்காருகள் வருவதாகவும், வீட்டு வளாகத்திலுள்ள புற்களை முறையாக கத்திரித்து வைத்திருந்தால் குறைந்தளவு கங்காருகளே வருவதற்கான வாய்ப்பு உள்ளதாகவும் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவில் தற்கொலைத் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்தவர் ரஷ்யாவில் கைது!

இந்தியாவில் தற்கொலை படை தாக்குதல் நடாத்துவதற்கு திட்டமிட்டிருந்த ஐ.எஸ் பயங்கரவாதி ரஷ்யாவில் கைது செய்யப்பட்டுள்ளார். கைதான ஐ.எஸ். பயங்கரவாதி மத்திய ஆசிய நாடு ஒன்றை சேர்ந்தவர் என ரஷிய உளவுத்துறை தகவல் தெரிவித்துள்ளது.

பயங்கரவாதியிடம் நடத்தி விசாரணையில் துருக்கி, இஸ்தான்புல் சென்று ஐ.எஸ் இயக்கத்தில் இணைந்ததாக தெரிவித்துள்ளார்.

மேலும், கைதான பயங்கரவாதிக்கு துருக்கி நாட்டில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

# சிங்கப்பூரில் ஓரினச் சேர்க்கைக்கு அனுமதி

## திருமண சட்டவிதிமுறைகளை மாற்ற அனுமதி மறுப்பு!

கடந்த ஞாயிற்றுக்கிழமை சிங்கப்பூர் பிரதமர் 'லீ சியென் லூங்' வெளியிட்ட அறிவிப்பைத் தொடர்ந்து உலகமெங்கிலும் இருக்கின்ற ஓரினச் சேர்க்கையாளர்கள் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தனர்.

ஆனால் வெளியிடப்பட்ட அறிவிப்பின் பிரகாரம் ஓரினச் சோர்கையாளர்கள் தமது கருத்துக்களையும், தமது வாழ்வாதாரத்திற்கு தேவையானவற்றை பெற்றுக் கொள்வதில் மாத்திரம் தான் முழுமையான சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் திருமண சட்ட விதிமுறைகளில் இன்னும் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவில்லை எனவும், ஓர் ஆணும் ஓர் பெண்ணும் இணைவது தான் சட்ட ரீதியாக திருமணம் எனவும் ஓரினச் சேர்க்கையாளர்கள் திருமண பந்தத்தில் இணைவதை இன்னும் சட்ட பூர்வமாக அங்கிகரிப்பதற்கான எந்த நடைமுறைகளும் மேற்கொள்ளப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கருத்து தெரிவித்த பிரதமர் 'லீ' எதிர்காலத்தில் திருமணமும் சட்டரீதியாக மாற்றப்படுவதற்குரிய வாய்ப்புக்கள் இருப்பதாகவும் அதற்கான பிரேரணைகள் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்திருக்கின்றார்.

அனுமதி கிடைக்கும் வரை திருமண சட்ட விதிமுறைகள் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் எனவும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

# பாரிய எடுப்பில் போர்ப் பயிற்சிகளை மேற்கொள்ளும் அமெரிக்கா - தென்கோரியா!

அமெரிக்கா மற்றும் தென்கொரியா ஆகிய இரு நாடுகளும் பாரிய எடுப்பிலான போர்ப் பயிற்சிகளுக்கு தம்மை ஆயத்தப்படுத்தி வருவதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த வருடத்தில் நான்காவது இராணுவ பயிற்சிகள் இரு நாடுகளுக்கும் இடையில் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் தரை, வான் மற்றும் கடற் பிராந்தியங்கள் என முப்படைகளையும் மேற்படி பயிற்சிகளில் ஈடுபடுத்த திட்டமிட்டுள்ளதாகவும் மேற்படி போர்ப் பயிற்சிகள் கொரிய தீபகற்பத்தை சுற்றியுள்ள பிரதேசங்களில் நடைபெறவுள்ளதாகவும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி இராணு பயிற்சி செயற்பாடுகள் வடகொரியவை மேலும் சினம் கொள்ள வைக்கும் எனவும், நிச்சயம் வடகொரியா தனது இராணுவத்தின் பலத்தை அதிகரிக்கும் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



# பிரியமான பீட்ரூட்டுடன்...

**நாம்** உண்ணும் கிழங்குகளில் 'பீட்ரூட்டின்' பங்கு இன்றியமையாதது.

இவை கண்ணைக் கவரும் அழகான கலருடன் இனிப்பு சுவையும் கொண்ட ஒரு வேர் காய்கறியாகும். பீட்ரூட் இனிக்கும் என்பதால் குழந்தைகளுக்கு மட்டுமல்ல பெரியவர்களுக்கும் பீட்ரூட்டை பிடிக்கும்.'பீட்' என்னும் செடியில் வளர்ந்த வேர்ப்பகுதியையே நாம் 'பீட்ரூட்' என்கிறோம். கரும்புக்கு அடுத்த படியாக இனிப்புக்காகவும் பயன்படுத்தும் சர்க்கரையின் மூலமாக 'பீட்ரூட் இருந்திருக்கிறது. இவை சமையலில் ருசியையும், உணவுகளுக்கு கவர்ச்சியான தோற்றத்தையும் தருவதுடன் நமது உடலில் அனைத்து உடல் உறுப்புக்களையும் சீராக இயங்கச் செய்வதில் பீட்ரூட் பெரும் பங்கு வகிக்கிறது.

## அதன் கவர்ந்திழுக்கும் நிறம்

அதன் நிறத்தைப் போலவே நம்முடைய உடலில் ரத்த ஓட்டத்தையும் பீட்ரூட் அதிக



ரிக்கிறது. உயர் ரத்த அழுத்தத்தை குறைப்பதோடு. ஒற்றைத் தலைவலிக்கு தீர்வாகவும் அமைகிறது. பெண்களைத் தாக்கும் மார்பக புற்றுநோய் வராமல் காக்கும்

வல்லமை பீட்ரூட்டிற்கு உண்டு. கர்ப்பமான பெண்களுக்குத் தேவையான அதிக சத்துக்கள் இந்த பீட்ரூட்டில் இருக்கின்றது. இதன் வண்ணமே இரத்த நிறம் தான் இதனை தொடர்ந்து சாப்பிட்டால் இரத்தச் சோகை குணமாகும். இரத்தத்தில் சிவப்பு அணுக்கள் அதிகமாகும். பீட்ரூட்டும் கேரட்டைப் போலவே நம் கண் பார்வைக்கு



மிகவும் நல்லது. தீக் காயம் பட்ட இடத்தில் பீட்ரூட் சாற்றைத் தடவினால் தீப்புண் விரைவில் ஆறும். மலச்சிக்கலுக்கு பீட்ரூட் சாறு ஒரு நல்ல மல மிளக்கியாகவும் செயல்படுகிறது.

## உடலுக்கும் உதட்டுக்கும் பீட்ரூட்

கிழங்கு வகைகளிலேயே அதிக ஆரோக்கிய நலன் நிறைந்த உணவாக பீட்ரூட் உள்ளதை நாமறிவோம். இது நம் உடம்பில் இரத்த உற்பத்திக்கு மட்டுமே பயன் தரும் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம் ஆனால் அதுக்கும் மேல் 'லிப்ஸ்டிக்' என்ற அழகு சாதனப் பொருளாகவும் இது பயன்படுகிறது.

## 'பீட்ரூ' சமைப்பதால் என்ன நன்மைகள்?

பீட்ரூட்டை சமைத்தோ, பச்சையாகவோ ஒருவர் வாரத்தில் நான்கு நாட்கள் சாப்பிட்டு வந்தால் நல்ல பலன் கிடைக்கும். பெரும்பாலும் கிழங்குகளில் நார்ச்சத்துக்கள் அதிகம் காணப்படுவதில்லை வெறும் கார்போஹைட்ரேட் சத்துகள் மட்டுமே பெருமளவு காணப்படுகின்றன எனவே கேரட், முள்ளங்கி, பீட்ரூட், நோக்காலெ், வெந்தயம், வெங்காயம், பூண்டு இவற்றின் கிழங்கு மற்றும் விதை வகைகளை உணவாக உட்கொள்ளும் பாழெுது அவற்றுடன் அதன் மேல் பாகங்களான அதன் இலைகள் மற்றும் தண்டுகளையும் சேர்த்து 'சூப்' வைத்தோ அல்லது அவற்றை விழுதாக அரைத்தோ உணவில் சேர்த்து பயன்படுத்துங்கள் இந்த தண்டு மற்றும் இலைகளில் சில உயிர்ச்சத்துக்கள், கனிமங்கள் மற்றும் அத்தியாவசிய உப்புகளும், நார்ச்சத்துகளும் இந்த கீரைகளின் பெருமளவு உள்ளனவாம்.



பிரமிளா நாகேஸ்வரராஜா






மற்ற காய்கறிகளைப் போலவே நாம் பீட்ரூட்டையும் சுவையாக சமைக்கலாம்.

1 பிரியாணி சுவையில் பீட்ரூட் சாதம்
2 பீட்ரூட் சூப்
3 பீட்ரூட் டீ
4 பீட்ரூட் சட்னி
5 பீட்ரூட் அல்வா
6 பீட்ரூட் ஜூஸ்
7 பீட்ரூட் ஊறுகாய்
8 சிறுவர்களுக்கு பிடித்த பீட்ரூட் ஜாம்

**இரத்த விருத்தியை அதிகரிக்கும் பீட்ரூட்டை வைத்து இந்த வாரம் குழந்தைகளுக்கு பிடித்த 'பீட்ரூட் ஜாம்' செய்முறை இதோ**

## தேவையானவை

**பீட்ரூட் - 1 பெரியது**
**வெள்ளைச்சீனி - 1/4 கப்**

## செய்முறை

பீட்ரூட்டின் வெளித் தோலை சீவி விட்டு கிழங்கை நன்றாகக் கழுவி சிறிய துண்டுகளாக வெட்டி சிறிதளவு தண்ணீர் விட்டு அவித்து ஆறவைத்து மிக்சியில் அரைக்கவும்.

அரைத்த கலவையை ஒரு அடி கனமான வாயகன்ற பாத்திரத்தில் விட்டு அடுப்பில் வைத்து 5 நிமிடம் காய்ச்சவும். தண்ணீர் வற்றி வரவும் அதனுடன் சீனியை சேர்த்து மேலும் கிளறி கலவை ஓரளவு கெட்டியானதும் அடுப்பை நிறுத்தி இரு சொட்டு எலுமிச்சை சாறு விடவும் இது மேலும் சீனிப்பாகு கெட்டியாகாமல் தடுக்க உதவும். ஆற விட்டு மூன்று நாட்கள் வரை இந்த ஜாமை நீங்கள் பயன்படுத்தலாம். எந்தவொரு வேதிப் பொருளும் இந்த 'ஜாமில்' கலக்கப்படவில்லை. வெறும் இரண்டு பொருட்களை மட்டும் வைத்து ஆரோக்கிய சமையல் முறையில் பீட்ரூட் ஜாம் இனி உங்கள் வீட்டிலும் நீங்களும் சுலபமாக செய்து சுவைத்திடலாம்.

இந்த வாரம் பீட்ரூட்டின் மகிமை அறிந்தீர்கள்.




# வழியெங்கும் விழிகளாகும் நாய்கள்!

‘**பயன்தூக்கார்** செய்த உதவி நயன்தூக்கின் நன்மை கடலின் பெரிது’ என்ற வள்ளுவனின் வாக்கானது எதுவித எதிர்பார்ப்புமின்றி ஒருவர் செய்யும் உதவியானது கடலினும் பெரிது என்ற அர்த்தத்தில் ஒருவர் செய்யும் உதவியின் மகிமையையும்,நன்றி மறவாமையின் முக்கியத்துவத்தையும் ஒருசேர விளக்குகின்றது. அதன்படி உதவி செய்தல்,நன்றி மறவாமல் என்பன ஆறறிவு படைத்த மனிதர்களுக்கு மட்டுமல்ல; ஐந்தறிவு படைத்த விலங்குகளுக்கும் உண்டு என்பது யாம் அனைவரும் அறிந்ததொரு விடயமே. அந்தவகையில் தம்மை வளர்த்தவர் மீது அதிகளவு விசுவாசம் கொண்ட விலங்காகவும், எதுவித எதிர்பார்பார்ப்புமின்றி உதவும் விலங்காகவும் நாயை அடையாளப்படுத்தலாம். அதனாலேயே நாம் அனைவரும் அதனை ‘நன்றியுள்ள மிருகம்’ என்றும் அழைத்துவருகின்றோம்.நாய்கள் தமது எஜமானர்களுக்கு பாதுகாவலனாக இருப்பதை விடுத்து தமது அசாதாரண திறமையால் இன்னும் பல சேவைகளை செய்துவருகின்றது.அதில் குறிப்பிடத்தக்க ஒரு வகையே ‘வழிகாட்டி நாய்கள்’ என அழைக்கப்படும் பார்வைத்திறன் குறைந்தவர்களுக்கும், பார்வையற்றவர்களுக்கும் கண்போல இருந்து அவர்களை வழிநடத்திச் செல்லும் நாய்கள்.

வழிகாட்டி நாய்களை சேவை விலங்கு என்றும் உதவி விலங்கு என்றும் அழைப்பர்.இவைகள் பார்வையற்றவர்களின் தடைகளை நீக்கி அவர்களை வழி நடத்துவதற்காக பயிற்சி பெற்றவைகள்.இந்த வழிகாட்டி நாய்களுக்கான முறையான பயிற்சி முதலாம் உலகப் போரின் போது ஜேர்மனியில் கண்பார்வை இழந்த வீரர்களுக்கு உதவுவதற்காக பயிற்சி அளிக்கப்பட்டு வந்த முறையாகும். ‘வழிகாட்டி நாய்கள் சங்கம்’ என்ற பெயரில் 1934ம் ஆண்டு பிரித்தானியாவில் முதலாவது அமைப்பு நிறுவனம் உருவாக்கப்பட்டது. அதன் முதல் நிரந்தர பயிற்சியாளர் ரஷ்யாவைச் சேர்ந்த ராணுவ வீரர் கேப்டன் நிகோலாய் லியாகா ஆவார்.அவர் 1933 இல் ஐக்கிய இராச்சியத்துக்கு வந்தார். இந்தப் பயிற்சிக்கான செலவுகளை அரசே ஏற்றுக் கொண்டது.

## நாய்களின் மொழியறிவு

மனிதர்களின் உணர்வுகளை தனது மோப்ப சக்தி மூலம் அறிந்து கொள்ளும் ஆற்றல் படைத்த நாயிற்கு மனிதர்கள் பேசும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வார்த்தைகளை புரிந்து கொள்ளும் அளவிற்கு நினைவாற்றல் உண்டு .ஆனாலும் கூட வழிகாட்டி நாயாக பயிற்றுவிப்பது என்பது சாதாரணமான ஒரு விடயமன்று.குறைந்தது 14–17 மாதம் வரை பயிற்சி அளிக்கப்பட வேண்டும். அதற்கு பொறுமை மிக அவசியமானதாகும். அவ்வாறு பயிற்சி அளிக்கப்படும் போது அதற்கு உணர்வுகளை கட்டுப்படுத்தவும், வீதியில் அதற்கு எதிரே வரும் நாய்க்கு எதிர் உணர்வை காட்டாத அளவிற்கும், தனது எஜமானருக்கு வழிகாட்டுவதே பிரதானமானது என்பதை உணர்ந்துகொண்டு நடக்கும் அளவிற்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும். தடைகள் நிறைந்த இடங்களில் பயணிக்கும் போது தனது எஜமானின் உயரத்தை அளவிடவும், கீழ்ப்படிதல் மற்றும் தனது எஜமானருக்கு ஆபத்து ஏற்படும் சமயத்தில் கட்டளைகளுக்கு கீழ்ப்படியாது அந்தப் பிரச்சினையை சமாளிக்கும் அளவிற்கு சாமர்த்தியமாக பயிற்சி அளிக்கப்படுகிறது.அவ்வாறு பயிற்சி பெற்ற பல நாய்கள் வழிகாட்டி நாய்களுக்கான சான்றிதழையும் பெற்றுக் கொண்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

நாய்களில் எத்தனையோ வகைகள் உண்டு. அனைத்து வித நாய்களும் ‘வழிகாட்டி நாய்’ என்ற தகுதியை பெற்றுவிட முடியாது. குறிப்பிட்ட சில இன நாய்களே இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றன. வழிகாட்டி நாய் என்றாலே



அதிகமானோர் மனங்களில் ‘ரெட்ரீவர்’ என்ற இன நாயே நினைவுக்கு வரும் . ஏனென்றால் இதற்குப் பயிற்சி கொடுப்பது மிக எளிதான விடயம். அத்துடன் உரிமையாளர்களுடன் மிகவும் நட்பாக பழகும். இது 1850 இல் ஐக்கிய இராச்சியத்தில் தோன்றியது ஒரு இனமாகும். இந்த இனத்தை பெறுவதற்கான கலவைகள் இன்னும் அறியப்படவில்லை.

நாய் இனங்கள் ஒவ்வொரு நாட்டிற்கு நாடு வேறுபட்ட தன்மையை கொண்டதாக காணப்படும். எடுத்துக்காட்டாக அமெரிக்கா இனம் பிரிட்டிஷாரை விட அமைதியாகவும் உயரமாகவும் இருக்கும். அடர்த்தியான மற்றும் ஊடுருவ முடியாத கோட் கொண்டது. அதனது நிறங்கள் பிரகாசமான தங்கத்தின் வெவ்வேறு நிழல்களில்,மென்மையாக அல்லது சற்று அலையலையாக இருக்கலாம்.என்றவாறாக அதன் இயல்புகளின் அடிப்படையில் வேறுபடுத்திக் கூறும் நிலை காணப்படுகிறது .

முதல் இரண்டு மாதங்களில் நாய்க்குட்டிகளில் இருந்து மிகவும் அன்பான,கவனம் உள்ள மற்றும் புத்திசாலி நாய்க்குட்டிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.எந்த ஒரு இனத்திலும் வழிகாட்டி நாய்களுக்கான தகைமைகள் என்று சில அடையாளப் படுத்தப்பட்டுள்ளன .

**(1) நடுத்தர அளவு (வாடியில் 68செள்ரி மீற்றர் வரை)**
**(2) சிறந்த செவிப்புலன் மற்றும் பார்வை.**
**(3) நல்லெண்ணம்.**
**(4)உள்ளுணர்வுகள் அனைத்தையும் கட்டுப்படுத்தும் திறன்.**

மேற்கூறப்பட்ட தகைமைகளுடன் தெரிவு செய்யப்படும் நாய்களிற்கே பயிற்சி அளிக்கப்படுகிறது .இவ்வாறு பயிற்சி அளிக்கப்பட்ட பின் வழிகாட்டி நாயானது பின்வரும் சேவைகளைச் செய்யுமளவிற்கு தகுதி பெற்றிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படும்.

**(1) செறிவு மற்றும் எந்த உணர்வுகளையும் சமாளிக்கும் திறன்**
**(2) தடைகளைத் தாங்களாகவே கடந்து அவற்றைப்பற்றி உரிமையாளருக்கு எச்சரிக்கும் ஆற்றல்.**
**(3) சகல இடங்களிலும் உரிமையாளர் இருக்கும் திசையை அறியும் திறன்**
**(4) நகர் ஒன்றை சுற்றி பார்வையற்ற நபரை கூட்டிச் செல்வது மற்றும் நகரும் கார்கள் இல்லாத நேரத்தில் தெருவை கடத்தல்.**
**(5) அவருக்கு நன்கு தெரிந்த பாதைகளில் உரிமையாளரின் திசை மற்றும் வீடுதிரும்பல்.**

போன்றன அடிப்படையாகும் ..

நாய்களை கௌரவப்படுத்தும் வகையில் தற்காலத்தில் திரையுலகிலும் நாய்களைக் கொண்டு எத்தனையோ படங்கள் வெளிவந்த வண்ணமே உள்ளன. அதில் நாய்களின் அசாதாரண திறமைகளை எம்மால் அறிந்து கொள்ள முடிகிறது. குறிப்பாக அண்மையில் வெளிவந்த ‘நெற்றிக் கண்’ என்ற திரைப்படமானது வழிகாட்டி நாயை அடிப்படையாக கொண்டே எடுக்கப்பட்டது.

> **நாய்களில் எத்தனையோ வகைகள் உண்டு. அனைத்து வித நாய்களும் ‘வழிகாட்டி நாய்’ என்ற தகுதியை பெற்றுவிட முடியாது. குறிப்பிட்ட சில இன நாய்களே இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றன. வழிகாட்டி நாய் என்றாலே அதிகமானோர் மனங்களில் ‘ரெட்ரீவர்’ என்ற இன நாயே நினைவுக்கு வரும். ஏனென்றால் இதற்குப் பயிற்சி கொடுப்பது மிக எளிதான விடயம். அத்துடன் உரிமையாளர்களுடன் மிகவும் நட்பாக பழகும்.**

சமூகம் ஒன்றில் பார்வையற்றோர் ஒதுக்கப்பட்டு வாழ்க்கையை இழந்த நிலையில் இருக்கும் சமயத்தில் அவர்களுக்கான ‘புதிய சுவாசமாக’ வழிகாட்டி நாய்கள் உதவுகின்றன. இழந்த வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்பி யாருடைய உதவியும் இன்றி அவர்களை தனித்துவமாக வாழ பேருதவி செய்யும் நாய்கள் அவர்கள் ஒவ்வொருவரது குடும்பங்களிலும் ஒரு நெருங்கிய உறுப்பினர் என்று தான் கூற வேண்டும் .இறைவன் படைத்த ஒவ்வொரு உயிர்களும் மற்றைய உயிரினத்தை சார்ந்தே வாழ வேண்டும். இதில் மனிதன், மிருகம் என்ற பாகுபாடு பார்க்கத் தேவையில்லை என்பது இதன் மூலம் புலனாகிறது.

‘வாயில்லாப்பிராணிகளை ஒருபோதும் வதைக்காதீர் – அவையே வாயுள்ள எத்தனையோ ஜீவன்களுக்கு புது வாழ்க்கையை தருகின்றன.’.



புஸ்பராசா
கோபிகா

**நேர்காணல்: தமிழ்**

வீதிகளில் வாகனங்களில் மோதுண்டு இறந்து பின்னரும் அதன் மீது பல வாகனங்கள் ஏறிச் சென்று துர் நாற்றம் வீசும் வரை வீதியில் கிடக்கின்ற நாய்களை பார்க்கின்ற போது மனதிற்குள் வலி ஏற்படுவதுண்டு.
சந்தைகளில் குறிப்பாக மீன் சந்தைகளில் உரப் பைகளில் கட்டிக்கொண்டுவரப்பட்டு வீசப்படும் நாய்க்குட்டிகள் ஊளையிட்டு அலைந்து திரியும் காட்சியும் மனதை வருத்தும்.பின்ன அவை உணவின்றி எலும்பு கூடுகளாக மாறி இறந்து கிடக்கும்.
தெருக்களில் திரியும் பல நாய்கள் குட்டை பிடித்து ஏனைய நாய்களிடம் கடி வாங்கிக்கொண்டும், மனிதர்களிடம் அடிவாங்கிக்கொண்டு ஓடிதிரியும் காட்சிகளும், பின்னர் அந் நாய்கள் எழுந்து நடக்க முடியாது படுத்து இடத்திலேயே இறந்து போகும்.
சில இடங்களில் மிஞ்சிய உணவுக்காக தேனீர் கடைகளுக்கு பின்னால் செல்கின்ற நாய்கள் சுடு நீர் ஊற்றப்பட்டு அலறியப்படி ஓடி வருவதுமுண்டு. அந்த சுடு நீர் ஊற்றப்பட்ட பகுதி புண்ணாகி மயிர்கள் கொட்டப்பட்டு தெருவில் தெரியும். மறுபடியும் அங்கு செல்லும்.
இந்த நாய்கள் மனிதர்களை பரிவோடு பார்த்து வாலை ஆட்டிக்கொண்டு நிற்கும் காட்சி மனதிற்கு கஸ்டமாக இருக்கும்.
சில இடங்களில் ஒரு நாயிற்கே போதாத உணவுக்கு பல நாய்கள் கடிப்படும் பரிதாபம் நடக்கும்.
இப்படி இந்த வீடற்ற நாய்களின் பரிதாப வாழ்க்கைக்கு ஒரு முடிவு வந்துள்ளதை நினைக்கும் போது மகிழ்ச்சியாக இருக்கிறது.
சிவபூமியின் இந்தப் பணிக்கு மனம் நிறைந்த பாராட்டுக்களை தெரிவிக்க வேண்டும். எல்லாம் உயிர்களே அந்த உயிர்களுக்கும் வலி இருக்கிறது.

**வாழ்த்துக்கள் சிவபூமி அமைப்பினருக்கு**




# நாய்களுக்கு ஒரு தாய்மடி!

சாதிக்கப் பிறந்த நம்மவர்



**சிவபூமி அமைப்பின் தலைவர் கலாநிதி ஆறுதிருமுகனுடன் ஒரு நேர்காணல்**

**? நாய்களுக்கான இந்தச் சரணாலயத்தை அமைக்க உங்களுக்கு உத்வேகம் கொடுத்தது எது?**

யாழ்குடா நாட்டில் தெருவில் விடப்பட்ட நாய்களின் தொல்லை தாங்கமுடியாமல் பலரும் முறையிட்டு வந்தனர்.குறிப்பாக அதனால் பல விபத்துக்களும்,உயிராபத்துக்களும் கூட ஏற்பட்டு வந்த நிலையிலும் அது பற்றி யாரும் கவனம் செலுத்தாத நிலையிலே நான்கு ஆண்டுகளுக்கு முன்பு தெருவிலே விடப்பட்ட நாய்களுக்கென ஒரு சரணாலயம் அமைத்து பராமரித்து வருகிறோம்.பளை இயக்கச்சி என்ற இடத்தில் 5 ஏக்கர் நிலத்தில் சிவபூமி நாய்கள் சரணாலயத்தை அவைகள் சுதந்திரமாக வளர்வதற்கு ஏற்ற முறையில் அமைத்துள்ளோம். தற்போது 326 நாய்கள் உள்ளன. 3 பேர் அங்கே வேலை செய்கின்றோம்.இந்த சரணாலயத்திற்கு பெரிதளவில் உதவிகள் கிடைப்பதில்லை.அங்கு பணிபுரிபவர்கள் தங்குவதற்கும் வசதிகள் அமைத்துள்ளோம்.

**? இந்தச் சரணாலயத்தின் பராமரிப்பில் நீங்கள் எதிர் கொள்ளும் சவால்கள் என்ன?**

தினமும் நாய்களுக்கான உணவு தயாரிப்பதற்கே 50ஓஞ், 60 டுஞ் அரிசி தேவைப்படும்.நாய்களுக்கு இரண்டு நேர சாப்பாடு வழங்கப்பட்டு வருகிறது. தயிர், சாம்பார் அடங்கலாக அனைத்து வகையான உணவுகளையும் கொடுத்து வருகிறோம்.தெரு நாய்கள் என்பதால் அதற்கு பல நோய்கள் ஏற்படும்.அதற்கான மருத்துவ செலவிற்கே அதிக பணம் தேவைப்படும்.வெளிநாட்டில் நாய்களை பராமரிக்கும் வசதிகள் போல் இங்கு இல்லை.அது தவிர அங்கு காணப்படுவது போல தொண்டு நிறுவனங்கள், அமைப்புக்களின் உதவிகளும் கிடைக்கப்பெறுவதில்லை.

**? இங்கு மருத்துவ வசதிகள் போதுமானதாக உள்ளதா?**

பெரும் சிரமத்திற்கு மத்தியிலே இதை செய்து வருகிறோம்.வைத்தியர்களை அணுகுவதே பெரிய சிக்கல்.அதுமட்டுமன்றி மருந்துகள் தட்டுப்பாடாக இருப்பதால் கொழும்பிலிருந்தே மருந்துகளை பெற்று வருகிறோம்.



எமது சேவையில் யாரும் இணைய விரும்பினால் நாம் ஆதரவு வழங்குவோம்.

**? சர்வதேச நாய்கள் தினத்தை முன்னிட்டு நீங்கள் பொதுமக்களுக்கு விடுக்க விரும்பும் செய்தி என்ன?**

யாழில் இன்னும் தெருவெங்கும் நாய்கள் காணப்படவே செய்கின்றன. வளர்ப்பவர்கள் மற்றவர்களுக்கு தொந்தரவு தராத வகையில் நாய்களை வளர்க்க வேண்டும். நாய்களை பராமரிப்பதற்கு ஒரு சரணாலயம் போதாது. எனவே அரசாங்கம் பொறுப்பெடுத்து மேலும் ஒரு சில சரணாலயங்களை அமைத்து நடாத்த வேண்டும்.

**? யாழில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை குறித்து?**

சரியான சிரமமாகவே இருக்கிறது.நாய்களால் கடிவாங்கி தடுப்பூசியும் இல்லாது மக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள்.








# கண்துடைப்பிற்காய் கையாளப்படும் காணாமல் போனோர் விவகாரம்!

**பயங்கரவாதத்** தடைச்சட்டம் மிகக் கொடூரமானது. அடிப்படை மனித உரிமைகளை மட்டுமல்லாமல் சர்வதேச நியமங்களுக்கு உட்பட்ட மனித நேயத்திற்கும் மானுட நீதிக்கும் முரணானது. விரோதமானது. பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்காக பயன்படுத்தப்படுவதாகக் கூறி, நடைமுறைப்படுத்தப்பட்ட அந்தச் சட்டம் யுத்தம் முடிவுக்கு வந்து ஒன்றரை தசாப்த காலத்தை எட்டுகின்ற நிலையிலும் தொடர்கின்றது. இந்தச் சட்டத்தினால் தமிழ் மக்கள் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகினர். ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்டமையும், அதற்கு அதிகார வர்க்கத்தினர் பொறுப்புக் கூறத் தவறியிருக்கின்றமையும் அந்தப் பாதிப்புக்களில் ஒன்று.

சட்டத்திற்கும் இயற்கை நீதிக்கும் முரணான வகையில் ஆட்களைக் காணாமல் ஆக்கியவர்களும், அந்த கைங்கரியத்தில் அவர்களை ஈடுபடச் செய்தவர்களும் நாட்டின் 'தண்டனை விலக்கீட்டு அரசியல் கலாசாரத்தினால்' பாதுகாக்கப்பட்டு வருகின்றனர். சட்டத்தைப் பாதுகாப்பவர்களும், சட்டங்களை நடைமுறைப்படுத்துபவர்களும் இந்த அரசியல் கலாசாரத்தினால் 'முரண் நிலை மனிதர்களாகச்' செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்டமைக்கு எதிராகக் குரல் எழுப்பி நீதி கோரி, நீண்ட காலமாகவே போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. ஆனால் காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய பிரச்சினைக்கு இன்னும் முடிவேற்படவில்லை. முடிவேற்படுவதற்கான அரசியல் அறிகுறிகளையோ அல்லது நீதிப் பொறிமுறையிலான வழிமுறைகளையோ காண முடியவில்லை. ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்டதைப் போலவே, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரமும் காணாமல் ஆக்கப்பட்ட நிலைமைக்கு ஆளாகியிருக்கின்றது என்றே கூற வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் கைது செய்யப்பட்ட பின்னரும், கடத்தப்பட்ட பின்னருமே காணாமல் போயுள்ளார்கள். காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பில் வேறு வேறு சந்தர்ப்பங்களில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுக்கள் நடத்திய விசாரணைகளில் 20 ஆயிரம் பேரி வரையில் காணாமல் போயுள்ளதாக அரசாங்கத்தினால் கணிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த ஆணைக்குழுக்களின் மீது காணாமல் ஆக்கப்பட்டோருடைய – பெரும்பான்மையான உறவினர்கள் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. அரசாங்கம் கண்துடைப்புக்காகவே




ஆணைக்குழுக்களை நியமித்து விசாரணைகளை நடத்துகின்றது என்று அவர்கள் கருதினார்கள். அந்த விசாரணை குழுக்களின் விசாரணை முறைகளும், விசாரணை நடத்தியவர்களின் செயற்பாடுகளும் அந்த அவநம்பிக்கையை உறுதிப்படுத்துவனவாகவே அமைந்திருந்தன.

ஆயினும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய விவகாரம் தொடர்பில் அரசாங்கம் மேற்கொண்ட விசாரணை நடவடிக்கைக்கு பாதிக்கப்பட்டவர்கள் ஒத்துழைக்கவில்லை என்ற குற்றச்சாட்டைத் தவிர்ப்பதற்காகவே பலரும் நம்பிக்கை அற்ற நிலையிலும் அந்த விசாரணைகளில் கலந்து கொண்டு சாட்சியம் அளித்திருந்தனர். அது மட்டுமல்லாடமல், அந்த ஆணைக்குழுக்களின் விசாரணைகள் பலனற்றவை என்பதை உறுதிப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு பாதிக்கப்பட்டவர்கள் அந்த விசாரணைகளில் கலந்து கொண்டனர்.

ஆணைக்குழுக்களின் விசாரணைகள் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றிய விவகாரத்திற்கு நீதியான முறையில் முடிவு காணும் வகையில் அமைந்திருக்கவில்லை. இதனால், அரசாங்கத்தின் மீது நம்பிக்கையற்ற நிலையில் நீதி கோரிய போராட்டங்கள் பரவலாக முன்னெடுக்கப்பட்டிருந்தன. இந்தப் போராட்டங்கள் முன்னதாக அரசியல் தலைமைகளின் கீழ் வழிநடத்தப்பட்டிருந்தன. ஆயினும், அந்தப் போராட்டங்களை ஆட்சியாளர்கள் உரிய முறையில் கவனத்திற் கொள்ளவில்லை. அவற்றை உதாசீனப்படுத்தும் வகையிலேயே அவர்கள் நடந்து கொண்டனர். இதனால் அரசியல் தலைமை வழியிலான போராட்டத்தில் பாதிக்கப்பட்டவர்கள் நம்பிக்கை இழந்தனர்.

தமிழ் அரசியல்வாதிகள் குறிப்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் அரசாங்கத்திற்கு உரிய முறையில் அழுத்தம் கொடுக்கவில்லை. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் மந்த நிலையிலேயே செயற்படுகின்றனர். ஒரு வகையில் அரசாங்கத்திற்கு ஆதரவாகவே செயற்படுகின்றார்கள் என்ற வகையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய

10 ஆம் பக்கம் பார்க்க...

> **தமிழ் அரசியல்வாதிகள் குறிப்பாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் அரசாங்கத்திற்கு உரிய முறையில் அழுத்தம் கொடுக்கவில்லை. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் மந்த நிலையிலேயே செயற்படுகின்றனர். ஒரு வகையில் அரசாங்கத்திற்கு ஆதரவாகவே செயற்படுகின்றார்கள் என்ற வகையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவினர்கள் சந்தேகம் கொண்டிருந்தனர். இந்த நிலையிலேயே வவுனியாவில் போராட்டம் நடத்துபவர்கள் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் மீதான தமது அவநம்பிக்கையை வெளிப்படுத்துவதற்காக கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தனின் உருவப் படத்தைத் தீயிட்டுக் கொளுத்திய கசப்பான சம்பவமும் இடம்பெற்றிருந்தது.**



பி.மாணிக்கவாசகம்




பாலசிங்கம் ஜெயகுமாரியும் மகளும் ஆர்ப்பாட்டத்தில்...



# கண்துடைப்பிற்காய் கையாளப்படும் காணாமல் போனோர் விவகாரம்!

உறவினர்கள் சந்தேகம் கொண்டிருந்தனர். இந்த நிலையிலேயே வவுனியாவில் போராட்டம் நடத்துபவர்கள் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் மீதான தமது அவநம்பிக்கையை வெளிப்படுத்துவதற்காக கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தனின் உருவப் படத்தைத் தீயிட்டுக் கொளுத்திய கசப்பான சம்பவமும் இடம்பெற்றிருந்தது.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்கும் என்பதில் அரசாங்கத்தின் மீதும் நம்பிக்கை இல்லை. தமிழ் அரசியல்வாதிகள் மீதும் நம்பிக்கை இல்லை என்ற நிலையிலேயே பாதிக்கப்பட்டவர்கள் தன்னெழுச்சி கொண்டு 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட பேராட்டமே ஆகஸ்ட் 12 ஆம் திகதி இரண்டாயிரம் நாட்கள் நிறைவைக் கண்டிருக்கின்றது.

## பாலேந்திரன் ஜெயக்குமாரி

முன்னதாக அரசியல்வாதிகளின் முக்கிய பங்கேற்புடன் அவர்களின் தலைமையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் பொறுப்பு கூற வேண்டும் எனக்கோரி பல்வேறு இடங்களிலும் நடத்தப்பட்ட போராட்டங்களில்



பங்கேற்றவர்கள் மீது அரசு பல்வேறு கெடுபிடிகளைப் பிரயோகித்திருந்தது. கெடுபிடிகளின் மூலம் அந்தப் போராட்டத்தை முறியடிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

கணவன்மார், பிள்ளைகள் என தமது குடும்ப உறவுகள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமையை அந்தப் போராட்டங்கள் வன்மையாகக் கண்டித்திருந்தன. போராட்டத்தில் பெரும் எண்ணிக்கையிலான உறவுகள் கலந்து கொண்டு தமது உள்ளக் கொதிப்பினை ஊடகங்களிடம் வெளியிட்டிருந்தனர். உள்நாட்டில் மட்டுமல்லாமல், சர்வதேச அளவிலும் இந்தப் போராட்டங்கள் அரசுக்குப் பெரும் அழுத்தத்தைக் கொடுப்பனவாக அமைந்திருந்தன. இத்தகைய சூழலிலேயே வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடி இந்தப் போராட்டங்களில் முன்னிலையில் சிறுமியாக இருந்த தனது மகளுடன் கலந்து கொண்டிருந்த பாலேந்திரன் ஜெயக்குமாரியை பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸ் பிரிவினர் கைது செய்தனர். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அவர் ஒரு வருட காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

அறுபது வயதுடைய பாலேந்திரன் ஜெயக்குமாரி திருகோணமலையில் மூன்று ஆண் பிள்ளைகள் ஒரு பெண் பிள்ளை ஆகிய தனது நான்கு பிள்ளைகளுடன் வசித்து வந்தார். குடும்பச் சுமையைத் தாங்கும் வகையில் திரியாய் பகுதிக்கு மேசன் வேலைக்குச் சென்று வந்த மூத்த மகன் யோகனை, 2006 ஆம் ஆண்டு ஒக்டோபர் 26 ஆம் திகதி துப்பாக்கிக் குண்டு பலி கொண்டதன் அந்தக் குடும்பத்தில் புயல் வீசியது.

வேலைக்குச் சென்றிருந்த யோகன் கைது செய்யப்பட்டு பின்னர், திகோணமலை மூன்றாம் கட்டைச் சந்தியில் கையிலும் கால்களிலும் விலங்கிடப்பட்ட நிலையில் சடலமாகக் கிடக்கக் காணப்பட்டார். மூத்த மகனின் இழப்பையடுத்து, ஆயுதக் குழு ஒன்றினால் பிடித்துத் தடுத்து வைக்கப்பட்ட தனது இரண்டாவது மகனை ஒருவாறு மீட்டு, சர்வதே செஞ்சிலுவைக்குழுவின் பாதுகாப்புடன் பொலிஸ் நிலையத்தில் தஞ்சம் புகுந்த சூட்டோடு சூடாக ஜெயக்குமாரி கிளிநொச்சிக்குக் குடும்பத்துடன் இடம்பெயர்ந்தார்.

வன்னிப்பிரதேசத்தின் போர்ச்சூழலில் சிக்கி மக்களோடு மக்களாகப் பல இடங்களுக்கும் இடம்பெயர்ந்த ஜெயக்குமாரி, இறுதியில் முள்ளிவாய்க்காலில் மழையாகப் பொழிந்த எறிகணை தாக்குதல் இரண்டாவது மகனைப் பலியெடுத்தது. அந்தப் பிரதேசத்தின் அக்காலச் சூழலில் மூன்றாவது மகன் பேராட்டத்தில் வலிந்து இணைக்கப்பட்டதைத் தொடர்ந்து காணாமல் போனார்.

காணாமல் போன மகனை யுத்தம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து முன்னாள் போராளிகளுக்கான புனர்வாழ்வுப் பயிற்சி முகாம் ஒன்றில் இருந்த நிலையிலான ஒரு புகைப்படத்;திலேயே ஜெயக்குமாரியினால் பார்க்க முடிந்தது. ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றின் அறிக்கை வடிவிலான ஒரு புத்தகத்தில் அந்தப் புகைப்படம் பிரசுரமாகியிருந்ததாகவும், அதனையே தனது மகன் தொடர்பிலான ஒரு முக்கிய ஆவணமாகக் கொண்டிருப்பதாகவும் ஜெயக்குமாரி கூறுகின்றார்.

பதின்பராய பருவத்தில் இருந்த தனது மகள் விபூஷிக்காவுடன் ஜெயக்குமாரி கலந்து கொண்ட போராட்டங்கள் மிகுந்த தாக்கத்தை ,ஏற்படுத்துபவையாக அமைந்திருந்தன. இந்தப் பின்னணியில் பயங்கரவாதம் மீண்டும் தலையெடுப்பதற்குத் துணையாக சந்தேக நபர் ஒருவருக்குத் தனது வீட்டில் அடைக்கலம் கொடுத்திருந்ததாகக் குற்றம் சுமத்தி பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் ஜெயகுமாரியை 2014 ஆம் ஆண்டு மார்ச் 12 ஆம் திகதி கைது செய்து பூஸாவில் தடுத்து வைத்து விசாரணை நடத்தினர். ஒரு வருடத்தின் பின்னர் 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதி புதுக்கடை நீதிமன்றத்தினால் அவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இரண்டு லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்த நீதிமன்றம் அவரை மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் சென்று கையெழுத்திட வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தது. அந்த உத்தரவுக்கமைய 2015 ஆம் ஆண்டு தொடக்கம்




> **கணவன்மார், பிள்ளைகள் என தமது குடும்ப உறவுகள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமையை அந்தப் போராட்டங்கள் வன்மையாகக் கண்டித்திருந்தன. போராட்டத்தில் பெரும் எண்ணிக்கையிலான உறவுகள் கலந்து கொண்டு தமது உள்ளக் கொதிப்பினை ஊடகங்களிடம் வெளியிட்டிருந்தனர். உள்நாட்டில் மட்டுமல்லாமல், சர்வதேச அளவிலும் இந்தப் போராட்டங்கள் அரசுக்குப் பெரும் அழுத்தத்தைக் கொடுப்பனவாக அமைந்திருந்தன. இத்தகைய சூழலிலேயே வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடி இந்தப் போராட்டங்களில் முன்னிலையில் சிறுமியாக இருந்த தனது மகளுடன் கலந்து கொண்டிருந்த பாலேந்திரன் ஜெயக்குமாரியை பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸ் பிரிவினர் கைது செய்தனர். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அவர் ஒரு வருட காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.**

கடந்த ஏழு ஆண்டுகளாக ஜெயக்குமாரி கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் சென்று கையெழுத்து வைத்து வருகின்றார். இந்த வகையில் காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடிப் போராடிய அவரை பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்ந்து துன்புறுத்தி வருகின்றது. ஆயினும் காணாமல் போயுள்ள தனது மகனைக் கண்டு பிடிப்பதற்கான போராட்டத்தை அவர் கைவிடுவதாக இல்லை.

## போராட்ட நிலைமைகளும் அடுத்த கட்ட நடவடிக்கையும்

ஆட்கள் காணாமல் போயுள்ளமைக்கு அரசாங்கமே பொறுப்பு கூற வேண்டும் என்பதே காணாமல் போயுள்ளவர்களது உறவினர்களின் கோரிக்கை. 'ஆட்கள் காணாமல் ஆக்கப்படுவதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. அது விரோதச் செயற்பாடு, அதனை அரச தரப்பினரோ அல்லது வேறு யாரேனும் செய்திருந்தாலும், அதற்கு அரசாங்கமே பொறுப்பு கூற வேண்டும். ஏனெனில் நாட்டு மக்களைப் பாதுகாப்பதும், மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிடிநாட்ட வேண்டியதும் அரசாங்கத்;தின் தலையாய பொறுப்பாகும். ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்டிருப்பதன் மூலம் அரசாங்கம் தனது இந்தப் பொறுப்பில் இருந்து தவறியிருக்கின்றது' என காணாமல் ஆக்கப்பட்டுள்ள தமது உறபினர்களைத் தேடிப் போராடுபவர்கள் சுட்டிக்காட்டி இருக்கின்றனர்.

அரசாங்கம் இந்தப் பொறுப்பை நிறைவேற்ற வேண்டும். ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்டமைக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தே தமது போராட்டம் இரண்டாயிரம் நாட்களாகத் தொடர்ந்து இடம் பெற்று வந்துள்ளது. எமது போராட்டம் 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. நீதி கிடைக்கும் வரையில் எமது போராட்டம் தொடரும். தோடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று வடக்கு கிழக்கு வலிந்து காடணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகளின் சங்கச் செயலாளர் லீலாதேவி ஆனந்தநடராஜா தெரிவித்தார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறிவதற்கும், நீதி நியாயத்தைப் பெற்றுக் கொள்வதற்குமான போராட்டம் தொடர்ந்து நடைபெற்ற போதிலும் உள்நாட்டில் அரசியல் மட்டத்திலோ அல்லது மனித உரிமை நிலைமையிலோ எந்தவிதமான முன்னேற்றமும் இன்னும் காணப்படவில்லை. இருப்பினும் பொருளாதார நெருக்கடியினால் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் மற்றும் அரச தலைமைளிலான மாற்றங்கள் தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்பு சார்ந்த அடக்குமுறைகள் பற்றிய உண்மை நிலைடி சர்வதேசம் உணர்ந்திருப்பதாகவும், இது சர்வதேச மட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் என்றும் லீலாதேவி குறிப்பிடுகின்றார்.

சர்வதேச தரப்புக்கள் உரிமை மீறல்களுக்கான பொறுப்பு கூறல் விடயத்தில் சர்வதேச நீதிமன்றத்தின் ஊடாக நியாயம் தேட முற்பட்டிருக்கின்ற சூழலில் அடுத்த கட்டமமாகஎதிர்வரும் ஐநா மனித உரிமைப் பேரவையின் அமர்வையும் தமது போராட்டக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான களமாகப் பயன்படுத்தத் தாங்கள் திட்டமிட்டிருப்பதாகவும் லீலாவதி தெரிவித்தார்.




# நன்றியுள்ள நாய்கள் மேலடா



ஜேம்ஸ் ஞானேந்திரன்

**எழுத** ஆரம்பிக்கும்போதே ஒரு பழைய சினிமாப் பாடலின் வரிகள்தான் ஞாபகத்திற்கு வருகின்றன.

ஒரேயொரு ஊரிலே ஒரேயொரு ராஜா. என்று ஆரம்பிக்கும் இந்தப் பாடல் வரிகளில்

நன்றியுள்ள உயிர்களெல்லாம் பிள்ளைதானடா, நன்றிகெட்ட மகனை விட நாய்கள் மேலடா.என்ற வரிகளும் வந்து போகின்றன.

நன்றி மறவாத மிருகம் என்று பார்த்தால், நாயை மிஞ்ச எந்த மிருகத்திற்கும் வாய்ப்பேயில்லை.நான்கு வருடங்களுக்கு மேலாக என்னோடு வளரும் பிரௌனி என்ற நாய் இதற்கு சாட்சி பகருகின்றது.



## ஆதிகாலத் தோற்றம்

ஆதிமனிதன் முதன் முதலில் மருத நிலம் நோக்கி வரும் போதும் அவன் மட்டும் வரவில்லை. தனக்குப் பயன்படக்கூடிய, தன்னால் அடக்கி ஆளக்கூடிய காட்டு விலங்குகளான ஆடு, மாடு உள்ளிட்ட விலங்குகளையும் தன்னோடு அழைத்தே வந்தான்.அவற்றுள் முதன்மையான விலங்கினம்தான் நாய். ‘ஆதி மனிதனுக்கு முதல் நண்பனே நாய்தான்! நாயும் நரி, ஓநாய், செந்நாய் குடும்ப வகையைச் சேர்ந்ததுதான். அவற்றைப் போல நாயும் ஒரு வேட்டையாடும் காட்டு விலங்குதான். அவைகளுக்கு இருந்த எல்லாக் குணமும் நாய்க்கும் இருந்தது என்பதை நாம் அவதானித்திருப்போம்.



## நாய்கள் வேண்டாமே

இந்த நன்றியுள்ள நாயை அனுமதிக்காத நாடுகள் கூட இருக்கின்றன. மாலதீவு ஒரு இஸ்லாமிய நாடு, இஸ்லாமிய மதப்படி, நாய்கள் அழுக்கானவை என்று கருதப்படுகின்றது.இந்த நாடு சட்டப்படி நாய்களைக் கொண்டு வருவதையோ அல்லது சொந்தமாக வைத்திருப்பதையோ தடை செய்கிறது. இந்த நாடு சுமார் 1190 தனித்தனி தீவுகளின் சங்கிலியால் ஆனது .மற்றும் மக்கள் வசிக்கும் சுமார் 200 அல்லது அதற்கு மேற்பட்ட தீவுகளில் ஒரு நாய் கூட முழு நாட்டிலும் இல்லை. ஆனால் இங்குள்ள பொலிஸார் மோப்ப நாய்களை வைத்திருக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல உல்லாசப் பயணிகள் தம்முடன் நாய்களைக் கொண்டு வருவதை, இந்த நாடு தடை செய்வதில்லை.

இந்த மத அடிப்படையில், நாய்களுக்கு தம் மண்ணில் தடை விதிக்கும் இன்னொரு நாடு சவுதி அரேபியா.

## புராதன எகிப்தும நாய்களும்

ஆரம்பகால. சரித்திரத்தை நோக்கினால் நாய்களின் பெறுமதிக்கு அதிக மதிப்புக் கொடுத்த நாடாக எகிப்து திகழ்கின்றது.

**உலகிலேயே மிகவும் இழிந்த பிறப்பாக நாய் கருதப்படுகிறது. நன்றியும் மோப்ப சக்தியும் காவல் கடமையும் கொண்ட நாயை கடைப்பிறப்பென்று கூறப்படுவதற்கு ஏதேனும் காரணம் உண்டா? என்றால் ஆம்! இதற்கு மூன்று காரணம் உண்டென்று கூறலாம். ஒன்று நாயானது எலும்பைக் கடிக்கும்போது நாயின் ஈறுகளிலிருந்து இரத்தம் கசியும். தனது இரத்தத்தை எலும்பிலிருந்து வருகின்ற இரத்தம் எனக் கருதும் நாய் அந்த எலும்பை விடாமல் கடித்துக்கொண்டே இருக்கும். இது ஒரு காரணம்.**

.இந்த நாட்டுக்கு பூனைகளுடன் இருந்த தொடர்பளவு , நாய்களுடனும் இருந்திருக்கின்றது. இவற்றை தமது நண்பர்களாகவும் வேட்டைக்கு உதவுபவர்களாகவும் இவர்கள் நாய்களை வளர்த்து வந்திருக்கிறார்கள். தம்மைப் புதைத்த சமாதிகளிலும், தாங்கள் வளர்த்த நாய்களைப் பற்றிய சித்திரங்களை வரைந்து வைத்திருக்கிறார்கள். கி.மு. 3500இற்குரிய சமாதியொன்றில், கழுத்தில் பிணைக்கப்பட்ட நாயுடன் ஒரு மனிதன் நடப்பது போல, ஓவியம் வரையப்பட்டுள்ளது. சுமேரியர்கள் நாய்களுக்கு கழுத்துப் பட்டிகளைக் கட்டியமைக்கான ஆதாரங்கள் ஆய்வாளர்களுக்கு கிடைத்துள்ளன. இவர்களுடைய கால்நடைகளை மேயக்கும் தருணங்களில் Basenji, Greyhound, Saluki இன நாய்கள் எஜமானுக்கு உதவியமை சித்திரங்களில் காணப்பட்டுள்ளன.Ibizan என்ற இன நாயின் சிததிரந்தான் அதிகமாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

## நட்பு நாடுகள்

பொதுவாகவே ஐரோப்பிய நாடுகளில் நா'யகளை தமது ஒரு குடும்ப அங்கத்தவராகவே கருதுகிறார்கள்.. ஐரோப்பிய நாடுகளில் இதை நான் நேரடியாகவே கண்டேன். நாய் வளர்ப்பவர்கள், விடுமுறையில் வெளிநாடுகளுக்கு சென்றால், நாய்களின் பாதுகாவலராக

12 ஆம் பக்கம் பார்க்க...




# நன்றியுள்ள நாய்கள் மேலடா



எவரையாவது நியமிப்பது பற்றி அறிவிக்காமல் பயணிக்க முடியாது. ஜெர்மனியில் செல்லப்பிராணிகளுக்கு கிட்டத்தட்ட ஒவ்வொரு ஸ்தாபனத்தின் கதவுகளும் திறந்திருக்கும். உலகின் மிகவும் செல்லப்பிராணி நட்பு நாடுகளில் ஒன்றாக அறியப்படும் ஜெர்மனி, தங்கள் விலங்குகள் பற்றி மிகவும் பெருமை கொள்கிறார்கள் , செல்லப்பிராணிகளை கவனத்துடனும் மரியாதையுடனும் எப்படி நடத்துவது என்பதற்கு உலகளாவிய எடுத்துக்காட்டாக ஜேர்மனி, சுவிட்ஸிலாந்து ஆகிய நாடுகளைக் கூறலாம். ஜேர்மனியின் , பெர்லின் நகரில் ஐரோப்பாவின் மிகப்பெரிய விலங்கு சரணாலயம் உள்ளது.விலங்குகளின் கண்ணியத்தைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளைக் கொண்ட முதல் நாடு சுவிட்சர்லாந்து. விலங்குகளின் வாழ்க்கை மற்றும் வேலை நிலைமைகளை மேம்படுத்துவதில் சுவிட்சர்லாந்து முன்னணியில் உள்ளது.

## நாய்களே மாமிசமாகும் கொடுமை

ஆடு, மாடு போல நாய்களையும் வெட்டி உண்ணும் கொடுமை உலகின் , பல நாடுகளில் அரங்கேறி வருகின்றது.தென் கொரியா, சீனா, நைஜீரியா, வியட்நாம் ஆகிய நாடுகள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவை.

நாய் மாமிசம் தின்பதற்காகவே ஒரு நாளை ஒதுக்கி, அந்த நாளில் நாய் மாமிசத்தை உண்டு கொண்டாடுவதுதான் சீனா. தென் சீனாவிலுள்ள யுதநீடிண என்ற நகரில்தான் இந்தக் கொடுமை நடந்து வருகி'னறது. இது வருடா வருடம் ஆனி மாதத்தில் இடம்பெற்று வருகின்றது.

சீனா முழுக்க முழுக்க நாய் மாமிசம் உண்ணும் நாடல்ல. பல மாவட்டங்களில் செல்லப் பிராணிகளாக அன்புடன் நாய்களை வைத்திருக்கும் சீனர்களும் நிறைய இருக்கிறார்கள். இவர்கள் இதிகாசக் கதைகளின் மன்னர் (Fu Xi) பன்றி, எருது, ஆடு குதிரை, கோழி ஆகியவற்றுடன் நாயையும வளர்ப்புப் பிராணியாகச் சேர்த்துள்ளார். ஆரம்பத்தில் வேட்டைக்கு உதவிய நாய்கள், சீனர்கள் விவசாயம் பக்கம் திரும்பியதால் , ஒரு காலகட்டத்தில் அதிகம் அவர்களால் தேடப்படவில்லை.

## குரைக்காத நாய்

நமது உயிரையும், உடைமைகளையும், தன் உயிரை கொடுத்தேனும் காப்பது நாய்.. அந்த வகையில் நம்மில் பலருக்கும் நாய் என்றாலே அதன் ஆவேசமாக குரைக்கும் சத்தம் தான் பயமுறுத்தும். ஆனால் குரைக்காத, எப்படி குரைக்க வேண்டும் என்று தெரியாத நாயினம் ஒன்றுள்ளது. இதன் பெயா் டிங்கோ (Dingo). ஆஸ்திரேலியாவில் உள்ள காடுகளில் இந்த வகை நாய்கள் உள்ளன. குரைக்காத போதிலும் இந்த நாய் சப்தமாக ஊளையிடும், உறுமும்.

மேலும் ஆப்பிரிக்காவில் பாசன்ஜி என்னும் ஒரு நாய் வகை உண்டு. இந்த நாய்க்கான சிறப்பம்சம் இது ‘ குரைக்காது’ என்பதுதான்.

> **அரிதாக ஒரு சில நாய்களின் குரைப்புச் சத்தம் சிங்கத்தின் கர்ஜனை போல இருக்கும். இவை மற்ற நாய்களைப் போல இல்லாமல் சுதந்திரமாக இருக்கக் கூடியவை. கென்யாவில் சிங்கங்களை வேட்டையாட இந்த வகை நாய்களை உடன் அழைத்துச் சென்று குகைகளுக்கு அருகில் இதைச் சிங்கம் போல முழங்க விடுவர்.இந்த ஓசையைக் கேட்ட சிங்கம் வெளியே வர, சிங்கத்தை வேட்டைக்காரர்கள் பிடித்திடுவர். இந்த நாய்கள் மற்ற நாய்களைப் போல் அல்லாமல் நல்ல சுத்தமாக இருப்பது இதன் தனிச் சிறப்பு**

இது அதன் உணர்வுகளை ஒரு வகை ஒலியாக வெளிப்படுத்தும். இந்த வகை நாய்கள் வேட்டையாடுவதில் கில்லாடி.

அரிதாக ஒரு சில நாய்களின் குரைப்புச் சத்தம் சிங்கத்தின் கர்ஜனை போல இருக்கும். இவை மற்ற நாய்களைப் போல இல்லாமல் சுதந்திரமாக இருக்கக் கூடியவை. கென்யாவில் சிங்கங்களை வேட்டையாட இந்த வகை நாய்களை உடன் அழைத்துச் சென்று குகைகளுக்கு அருகில் இதைச் சிங்கம் போல முழங்க விடுவர்.இந்த ஓசையைக் கேட்ட சிங்கம் வெளியே வர, சிங்கத்தை வேட்டைக்காரர்கள் பிடித்திடுவர். இந்த நாய்கள் மற்ற நாய்களைப் போல் அல்லாமல் நல்ல சுத்தமாக இருப்பது இதன் தனிச் சிறப்பு..

## குரைத்தால் குற்றம்!

பெரும்பாலோர் நாய் வளர்ப்பதே திருடர்களிடம் இருந்து பாதுகாத்து கொள்வதற்குதான். நாய் குரைத்தால் திருடன் ஓடி விடுவான். அல்லது நாம் உஷாராகி அவனை



பிடிக்கலாம்.ஆனால், இத்தாலியின் கன்ட்ரோன் நகர மேயருக்கு குரைக்கும் நாய்களை கண்டாலே அலர்ஜி. அதுவும், மதியம் மூக்கு புடைக்க சாப்பிட்டு விட்டு குட்டித் தூக்கம் போடும்போது நாய் குரைத்தால் தாங்குவாரா?

‘ரிபோஸ்’ repose நேரத்தில் குலைக்கும் நாயின் உரிமையாளருக்கு, 1,400 முதல், 35 ஆயிரம் ரூபாய் வரை அபராதம் என்று உடனே சட்டம் இயற்றி விட்டார்.. அதுமட்டுமல்ல,ராத்திரியில் கூட, முடிந்த வரை நாய் குரைக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டுமாம்.தினமும் நாயை ‘வாக்கிங்’ அழைத்துச் செல்வோர், அதன் கழுத்தில் குறைந்தபட்சம், 26 அடி நீளமுள்ள சங்கிலியை கட்டி இழுத்துச் செல்ல வேண்டும். நாய்க்கு தேவையான உணவு, தண்ணீர் கொடுக்க வேண்டும். வழியில் நாய் சிறுநீர் அல்லது மலம் கழித்தால், அந்த இடத்தை கழுவி சுத்தம் செய்து தரவேண்டும் என, பல அதிரடி உத்தரவுகளை பிறப்பித்துள்ளார் மேயர்.

இவர் நாய் ஆதரவாளரா அல்லது இந்த கெடுபிடிகள் மூலம் நாய்களை ஒழித்து விட்டு நிம்மதியாக குறட்டை விட்டு தூங்க நினைக்கிறாரா என புரியாமல் விழிக்கின்றனர் உள்ளூர்வாசிகள்.இது 2015இல் வாசித்த ஒரு தகவல்.

அது என்ன ‘ரிபோஸ்’?

மத்திய தரைக் கடல் மற்றும் லத்தீன் நாடுகளில் மதியம் 2 – 4 மணி வரை உறங்க நேரம் ஒதுக்குகிறார்கள். இத்தாலியில் இதை ‘ரிபோசா’ நேரம் என்கிறார்கள். சில சிறிய உணவகங்கள் தவிர, தேவாலயங்கள், சிறு கடைகள், அருங்காட்சியகங்கள் என, அனைத்தும் இந்த நேரத்தில் மூடப்பட்டிருக்கும்

## கடிக்கும் நாயும் குரைக்கும் நாயும்

உலகிலேயே மிகவும் இழிந்த பிறப்பாக நாய் கருதப்படுகிறது. நன்றியும் மோப்ப சக்தியும் காவல் கடமையும் கொண்ட நாயை கடைப்பிறப்பென்று கூறப்படுவதற்கு ஏதேனும் காரணம் உண்டா? என்றால் ஆம்! இதற்கு மூன்று காரணம் உண்டென்று கூறலாம். ஒன்று நாயானது எலும்பைக் கடிக்கும்போது நாயின் ஈறுகளிலிருந்து இரத்தம் கசியும். தனது இரத்தத்தை எலும்பிலிருந்து வருகின்ற இரத்தம் எனக் கருதும் நாய் அந்த எலும்பை விடாமல் கடித்துக்கொண்டே இருக்கும். இது ஒரு காரணம்.

இரண்டாவது காரணம் நாயின் போகநிலை. உலகில் எந்த ஜீவராசிக்கும் இல்லாத துன்பத்தையும் வேதனையையும் போக சுகத்தின் பின் நாய்கள் அனுபவிக்கின்றன. அடுத்தது, இன ஒற்றுமை இல்லாமை. இந்த மூன்று காரணங்களாலும் நாயினம் கடைப்பட்டதாயிற்று. இவை நாய்பற்றிய தகவலுக்கானவை. இங்கு நாயில் இரு வகைமை உண்டு. ஒன்று கடிநாய். மற்றையது குரைக்கும் நாய். குரைக்கும் நாய் கடிக்காது என்று தமிழ்ப் பழமொழி உண்டு. எனவே குரைக்கும் நாய் கடிக்காதது போல கடிக்கும் நாய் குரைக்காது. அப்படியானால் குரைக்கின்ற நாய் கடிக்காததற்கும் கடிக்கின்ற நாய் குரைக்காததற்கும் காரணம் என்ன? இரண்டுக்கும் பயமும் பயமின்மையும்தான் காரணம்.

பயந்த நாய்களே அடித்து வைத்துக் குரைக்கும். அநேகமாக வீட்டைச் சுற்றி ஓடிக் குரைக்கின்ற நாய்கள் இந்த வகைக்குள் அடங்கும். கடிக்கின்ற நாய்கள் குரைப்பதில்லை. அவை சத்தம் சலனம் இல்லாமல் இருந்துவிட்டு அதிரடியாக தாக்கிவிடும். இதைத்தான் கடிநாய் என்று கூறுவார்கள்.

நாய்களுக்கு இருக்கின்ற இயல்பு மனிதர்களுக்கும் இருக்கவே செய்கிறது. நாற்பது கடந்தால் அந்தக் குணம் மனிதர்களுக் கும் வந்துவிடுமாம். மனிதர்களிலும் பயந்தவர்கள், வீரம்மிக்கவர்கள் என்று இருக்கிறார்கள் அல்லவா?

## நாயை வைத்து பழமொழிகள்

நாயை வைத்து ஏராளமான பழமொழிகள் சிலவற்றை பகிர்ந்து கொள்கிறேன்...

★ நாய் விற்ற காசு குரைக்குமா? மீன் விற்ற காசு நாறுமா?

★ நாய் நாலு காதம் ஓடினாலும் குதிரை வேகம் ஆகுமா?

★ நடுக்கடலிலும் நாய்க்கு நக்கு தண்ணீர்தான்..

★ நாய் நக்கி குளம் வற்றுமா?

★ நாய்க்குத் நக்கத் தெரியும்; முதலைக்கு முழுங்கத் தெரியும்

★நாயைக் கண்டால் கல்லை காணோம், கல்லைக் கண்டால் நாயை காணோம்

★ நாய் அறியுமா, நறு நெய்யை?

★ நாய்க்கு நாக்கில் வேர்க்கும் காக்கைக்கு மூக்கில் வேர்க்கும்





# கடைசி தீபாவளி!

**அடையாறு** எல்.பி ரோட்டுக்கு கீழே இருக்கிற பாலத்துக்கு அடியில் தான் நான் இருந்தேன். வழக்கமாக பகல் நேரத்தில் அங்குதான் இருப்பேன். ஆனால் இரவு நேரங்களில் பக்கத்தில் இருக்கிற தெருவுக்குப் போயிடுவேன். ஒரு மரத்துக்குக் கீழே குழி தோண்டி படுத்துக்கொள்வேன். அந்தத் தெரு முழுவதும் ஆபீஸ்தான். அதனால் இரவு நேரங்களில் வண்டி எதுவும் வராது. பாலத்துக்குக் கீழே இருக்கிற பிச்சைக்காரர் ஒருவர் அவருக்கு கிடைக்கின்ற கறி சோறில் அப்பப்ப எனக்கும் தருவார்.

எனக்கு அவர் பிரண்டாகி விட்டார். அவருக்கு நான் பிரண்டாகி விட்டேன். அவர் மட்டுமல்ல அப்பப்ப இன்னொருத்தர் கூட வருவாரு. பார்க்க டிப்டாப்பா ஆபிசர் மாதிரி இருப்பாரு. வரும்போதெல்லாம் பிஸ்கட் சோறு பிரியாணி வைப்பாரு. அப்புறம் தண்ணி கூட ஒரு டப்பால ஊத்தி வைப்பாரு. எனக்கு இந்த பிஸ்கட் சோறு சாப்பாடெல்லாம் கூட எப்படியாவது யாராவது ஒருத்தர் பாவம் பார்த்து போட்டுடுவாங்க. ஆனால் தண்ணிதான் கிடைக்காது. அவர் தினமும் தண்ணி கொண்டு வந்து எனக்கு வச்சதுனால மற்றவர்களை விட அவரை எனக்கு ரொம்ப பிடிச்சது.






இல்ல அப்படின்னா நான் தண்ணி குடிக்கிறதுக்கு ரொம்ப தூரம் போக வேண்டி இருக்கும். சில நாட்கள் தண்ணி கிடைக்காம சாக்கடைத் தண்ணியைக் கூட குடிச்சிருக்கேன். எத்தனையோ பேரு என்ன என்னமோ கொண்டு வந்து தராங்க. ஆனா இவர் மட்டும் தான் எனக்கு தண்ணிய வச்சாரு. இவர் தண்ணி கொண்டு வந்து வைக்கிறதுக்கு முன்னாடி ஒரு நாள் தண்ணி குடிக்க நானும் என்னோட தங்கையும் பெட்ரோல் பங்குக்கு முன்னாடி போய்கிட்டு இருக்கும்போது ஒரு குப்பை வண்டிக்காரன் என்னுடைய தங்கச்சி மேல வண்டி ஏத்தி கொன்னுட்டான். கொஞ்ச நாள் கழிச்சு அதே ரோட்ல ரோடு கிராஸ் பண்ணும் போது அம்மாவை ஒரு பஸ் காரன் அடிச்சிட்டான். அம்மா அந்த இடத்திலேயே செத்துட்டாங்க.

அது வரைக்கும் நாங்க மூணு பேரும் ஒண்ணாத்தான் போவோம். ஒண்ணாத்தான் வருவோம். அதுக்கப்புறம் தனியா வாழப் பழகிட்டேன். நான் வாழ்ந்துட்டு இருக்குற தெரு பெரிய பெரிய கம்பெனிகள் இருக்கிற தெருவாய் இருந்துச்சு. இப்ப கொஞ்ச நாளாவே சின்ன பசங்க அந்த தெருவில் விளையாடுவதைப் பார்க்கிறேன். அநேகமா வீடுகளும் வந்திருக்கும் என்று நினைத்தேன். அந்தப் பசங்க அப்பப்ப எனக்கு பிஸ்கட் தருவாங்க. நான் அவங்களைப் பார்த்தாலே வாலை ஆட்டிக்கிட்டு அவங்க கிட்ட போவேன். அவங்க என்னோட தலைமைல கைய வச்சு செல்லம் கொஞ்சுவாங்க. அன்னிக்கு வழக்கமா படுக்குற மரத்துக்கு கீழ படுத்து இருந்தேன். திடீர்னு ஒரு சத்தம். என்ன அப்படின்னு சுதாரிக்கிறதுக்குள்ள என் கண்ணுல வந்து என்னவோ அடிச்சு வலது கண்ணு வெளியில் வந்துடுச்சு.



சரிதா. ஜோ

அப்பதான் டேய் இந்நேரத்தில் பட்டாசு வெடிச்சுக்கிட்டு என்று யாரோ அந்த பசங்களை அதட்டும் சத்தம் என் காதில் விழுந்தது. கண்ணு மண்ணுத் தெரியாம தறிகெட்டு ஓடினேன். வலியோடவும் பயத்தோடவும் ஒரு காருக்கு அடியிலேயே போய் படுத்துக்கிட்டேன். ரெண்டு நாள் அந்தக் காருக்கு அடியிலேயே கிடந்தேன். அப்பப்ப யாரோ வந்து என்னைக் கூப்பிட்டாங்க. நான் போகல. வழக்கமா வர்ற அந்த சாப்பாடு தண்ணி கொடுக்கறவர் கூட வந்து கூப்பிட்டார். எனக்கு குரல் நல்லா அடையாளம் தெரிந்துவிட்டது. காருக்கு அடியில என்னைக் குனிஞ்சு பார்த்துக்கொண்டே கூப்பிட்டாரு. எனக்கு இருந்த மனநிலையில் அவர் கூப்பிட்டது கூட காதில் வாங்கிக்கல. எனக்கு அவ்ளோ பயம். கொஞ்ச நேரம் கழிச்சு ரெண்டு மூணு பேரு வலையோட வந்தாங்க. என்ன புடிச்சுட்டுப் போயி என்னோட அந்த ஒரு கண்ணுக்கு ஆபரேஷன் செய்தாங்க. இரண்டு நாள் கழிச்சு இங்க கொண்டுவந்து விட்டார்கள். ஆனால் என்னால பழைய நிலைக்கு வர முடியல. ஒரு கண்ணு மட்டும் தான் தெரிந்தது.

அந்த ஆபரேஷன் பண்ண கண்ணு வலி போச்சே தவிர சரியாத் தெரியல. அப்போ இருந்து வெடி சத்தம் கேட்டாலே என்னவோ பண்ணுது. இதோ இப்போ உங்ககிட்ட இத சொல்ற இந்த நேரத்துல என்னோட உயிர் கொஞ்சம் கொஞ்சமா பிரிஞ்சுகிட்டு இருக்கிற மாதிரிதான் இருக்குது. இது தான் என்னோட கடைசி தீபாவளியா இருக்குமோ?






# நாய்களின் விசேட பண்புகள்




★மனிதனிடம் இருக்கும் மோப்பசக்திகளை விட நாய்களின் மோப்பசக்தி கிட்டத்தட்ட 10000 முதல் 100000 மடங்கு அதிகமானதாகும்.

★மனிதர்களின் உணர்வுகளைக் கூட நாய்கள் அவைகளின் மோப்ப சக்திகளால் அறிந்துவிடும்.

★மனிதர்களுக்குள் இருக்கும் கான்சர் போன்ற நோய்களையும் நாய் தனது மோப்பசக்தி மூலம் கண்டறிந்து விடும்.

★உலகிலேயே அதிகமான நாய்களை செல்லப்பிராணியாக வளர்த்து வரும் நாடு அமெரிக்கா. அங்கு 75 மில்லியன் நாய்கள் செல்லப்பிராணியாக வளர்க்கப்படுகின்றன.

★தற்போது உலகிலேயே 400 பில்லியன் நாய்கள் வளர்க்கப்படுகின்றன.

★பொதுவாக நாய்க்குட்டிகளுக்கு 28 பற்களும், வளர்ந்த நாய்களுக்கு 42 பற்களும் காணப்படும்.

★நாய் 1 மணிநேரத்தில் 19 மைல் தூரம் ஓடும் ஆற்றலுடையது.

★மனிதர்கள் பேசும் 1000 இற்கும் மேற்பட்ட வார்த்தைகளை நாய் இனத்தால் புரிந்து கொள்ளமுடியும்.

★நாய்கள் 10–14 ஆண்டுகள் வரை உயிர் வாழும்.



மு.சானுகா
யா/ நடேஸ்வரா கல்லூரி

# நாமும் சாதாரண நாய்களே!



பு. பவஸ்ரினா
யா/அருணோதயா கல்லூரி



தெருநாய் என்று சொல்லி எம்மை ஏன் துரத்துகிறீர்கள்!

நாம் வாழ ஒரு வீடு இருந்தால்,ஏன் நாம் தெருவில் தஞ்சம் புகப்போகிறோம்?

உங்கள் வீட்டில் ராஜா,ராணி போல் வாழும் உங்கள் செல்ல நாய்கள் போலவே நாமும்!!

அவைகள் போலவே எமக்கும் உணர்வுகள் உண்டு!

எம்மை பார்த்து பரிதாபப்படாவிடினும் பரவாயில்லை.

இப்படி வாய்க்கு நூறு தரம் தெரு நாய் என்று சொல்லியும், பசியில் உம் பின்னால் வரும் வேளைகளில், எம்மை திட்டித்தீர்க்காதீர்கள்!

உம்மால் முயன்றால் எம் பசி தீர்க்க உணவு தாருங்கள்!

இல்லையேல், எம்மை கண்டுக்காமல் விட்டுச்செல்லுங்கள்.

நாம் தெருநாய்கள் தான்!

எமக்கென்று ஒரு வசிப்பிடம் கிடைத்தால் செல்லப்பிராணி ஆகிடுவோம். வாழ வழி தெரியாமல் தவிக்கின்றோம். இறைவா!

எமக்காய் ஒரு புகலிடம் தருவாயாக!



# நாய்

எனது செல்லப்பிராணி நாய்.
நாயின் பெயர் பைரவ்
அது வீட்டைக் காக்கும்.
நாய் நன்றி உள்ள மிருகம்.
நாய் மனிதர்களின் தோழன்

எனது செல்லப்பிராணியை
எனக்கு மிகவும் பிடிக்கும்.



கு.தஷான், தரம் 3.C
உவெஸ்லி கல்லூரி கொழும்பு



இனியா எங்கள்
நண்பன் என்னுடன்
விளையாடும் எங்களை இரவு
முழுவதும் பாதுகாக்கும் என்
நண்பன் இனியா.

பூமிகா
3ம் வகுப்பு , அரசுப் பள்ளி
அருப்புக்கோட்டை,
விருதுநகர் மாவட்டம்
தமிழ்நாடு, இந்தியா






ர.றஜின் பிரசாத்
பிரான்ஸ்

# நாய்களின் இனங்கள்

நாய்களில் தோழமை நாய்கள், பாதுகாவல்கள் நாய்கள், வேட்டை நாய்கள்,வேட்டை மீட்டெடுப்பு நாய்கள், பொம்மை இன நாய்கள் என்ற பிரதான இனங்களும் , அதற்குள் பல துணை வகைகளும் காணப்படுகின்றன.

**1) தோழமை நாய்கள் - தனிமையை போக்கும் நோக்கத்திற்காக வளர்க்கப்படுபவை.**

★ மால்தீஸ், லஷ்ஆப்சோ, காக்கர்ஸ் பேனியல், டால்மேசன், டேசண்,ஸ்பிட்ஸ்.

**2)பாதுகாவல் நாய்கள்- பாதுகாப்பு நோக்கத்திற்காக வளர்க்கப்படுபவை.**

★புல்டாக், டாபர்மேன்

**3)பணிநாய்கள் - செல்லப்பிராணியாக மட்டுமன்றி பல்வேறு வகையான வேலைகளை செய்ய வளர்க்கப்படுபவை.**

★ஜெர்மன் ஷெபர்டு, லேப்ராடர்

**4) வேட்டை நாய்கள்- வேட்டையாடுவதற்கென வளர்க்கப்படுபவை.**

★ இராஜபாளையம் நாய்,கோம்பை நாய், சிப்பிப்பாறை நாய், கன்னி நாய்.

**5)வேட்டை மீட்டெடுப்பு நாய் - வேட்டையாடப்பட்ட அல்லது சுடப்பட்ட இரையை மீட்டெடுத்துக் கொடுக்க வளர்க்கப்படுபவை.**

★லேப்ரடார் ரெட்றைவர், கோல்டன் ரெட்றைவர்.

**6) பொம்மை இனங்கள் - இவ்வகை இனங்கள் அளவில் சிறியதாகவும்,பார்ப்பதற்கு பொம்மை போன்றும் காணப்படும்.**

★பூடுல்,பொமேரியன்,பீகிஞ்சிஸ்,சிகுவாகுவா.



யோ.அன்ரனி சியானுயன்
யா/ நடேஸ்வரா கல்லூரி

# அரசியலிலில் கொள்கையே தவமாக கொண்ட துறவி!

## சென்னை ராஜதானியின் (Madras Presidency) பிரதமர்( பிரீமியர்) ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களின் நினைவு தினம் இன்று

**நானும்** ஒரு விவசாயி என்று உரிமை கொண்டாடும் முதல்வர்களைப் பார்த்திருக்கிறோம். ஆனால், அரசியல் வாழ்விலிருந்து மீண்டும் விவசாயத்தை நோக்கி அவர்கள் திரும்புவார்களா என்றால் சந்தேகம்தான். இந்தியா சுதந்திரம் பெற்றபோது, சென்னை மாகாணத்தின் முதல்வராகப் பொறுப்புவகித்தவர் ஓ.பி.ஆர். என்று அழைக்கப்படும் ஓமந்தூர் பெரியவளைவு ராமசாமி (1895–1970). தேடிவந்த முதல்வர் பதவியை ஏற்றுக்கொள்ள மூன்று மாத கால அவகாசம் எடுத்துக்கொண்டது அரசியல் அதிசயம். முதல்வர் (அன்று பிரதமர்)பதவியிலிருந்து விலக நேர்ந்ததும் சொந்த ஊருக்குச் சென்று முழுநேர விவசாயியானார்.

காங்கிரஸ் கட்சியைக் கடுமையாகச் சாடிய திராவிட இயக்கத்தினரும் ஓமந்தூராரைப் பாராட்டவும் ஆதரிக்கவும் செய்தார்கள் என்பது வரலாறு. காந்தியர்களின் எளிமைக்கு காமராஜரையும் கக்கனையும் உதாரணம் காட்டுபவர்கள்கூட ஓ.பி.ஆரை ஏனோ மறந்துவிடுகிறார்கள். ஆதி திராவிடர் நலத் துறையைத் தனித் துறையாக இயங்கச் செய்தவர் அவர். ஒடுக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினரை திருப்பதி ஏழுமலையான் கோயில் அறங்காவலராக நியமித்தவர். முதல்வரின் அலுவலகச் சுவரில் காந்தி, நேருவின் படங்கள்; வீட்டுச் சுவரில் வள்ளலாரின் படம் என்று அரசியலுக்கும் ஆன்மிகத்துக்கும் நடுவில் ஓமந்தூராரின் பொதுவாழ்க்கை இருந்தது.

ராமசாமி ரெட்டியார் அவர்கள் சென்னை மாகாணத்தின் முதலமைச்சராக மார்ச் 23, 1947 முதல் ஏப்ரல் 6, 1949 வரை பதவியில் இருந்தார்.

சுதந்திர இந்தியாவின் சென்னை மாகாணத்தின் முதல் முதலமைச்சராவர்.

இவரது பதவிக் காலத்தில், சென்னை கோயில் நுழைவு அதிகாரமளிப்புச் சட்டம் 1947 இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின் மூலம் தலித்துகள், தாழ்த்தப்பட்டோர் இந்து கோயில்களுக்குள் செல்ல உரிமையளிக்கப்பட்டது.

அவரது ஆட்சியின் போது மடங்கள், ஆதீனங்கள், கோயில்களின் சொத்துக்களை சிலர் மட்டுமே சுரண்டி வருவதைத் தடுக்க சட்டம் கொண்டுவந்தார்.



### ஜமீன்தார் இனாம்

முறையை ஒழித்தார், ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தார். பூரண மதுவிலக்கை அமல்படுத்தினார்.

.இந்து சமய அறநிலையத்துறைச் சட்டம் மற்றும் தேவதாசி முறை ஒழிப்பு சட்டம் ஆகியவற்றை இயற்றினார். சமூக நீதி உத்தரவு பிறப்பித்தார். தமிழ் பயிற்சி மொழி. தமிழ் கலைகளஞ்சியம் (Tamil Encyclopaedia) 8 தொகுதிகள், தமிழில் பாட நூல்கள் வெளிவரவும், அணைகள் கட்ட திட்டங்கள் என பல இவரின் பணிகளை பட்டியல் போடலாம். அரசியிலில் தவம் மேற்கொண்ட அரசியிலில் துறவி.

இப்படியான மாமனிதர் படத்தை கடந்த 1950 களில் வைக்க வேண்டியது ; நீண்ட காலமாக கோரிக்கை கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன் தான் தமிழக சட்ட மன்றத்தில் வைக்கப்பட்டது.

இங்கே உண்மையான அரசியலில் களப்பணி, நேர்மை என கடந்த கால அரசியிலில் இன்று தேவையில்லை. அதை குப்பை தொட்டில் போட வேண்டும் என நினைக்கும் அறிவு கெட்ட ஜென்மங்களை என்ன சொல்ல?



கே. எஸ். இராதாகிருஷ்ணன்

*மாக்கவி பாரதி வரிகள் நினைவில் வருகிறது..*

*விதியே, விதியே, தமிழச் சாதியை*
*என்செய நினைத்தாய் எனக்குரை யாயோ?*
*சார்வினுக் கெல்லாம் தகத்தக மாறித்*
*தன்மையும் தனது தருமமும் மாயாது*
*என்றுமோர் நிலையா யிருந்துநின் அருளால்*
*வாழ்ந்திடும் பொருளொடு வகுத்திடு வாயோ?*
*தோற்றமும் புறத்துத் தொழிலுமே காத்துமற்று*
*உள்ளுறு தருமமு உண்மையும் மாறிச்*
*சிதைவுற் றழியும் பொருள்களில் சேர்ப்பையோ?*

*‘அழியாக் கடலோ? அணிமலர்த் தடமோ?*
*வானுறு மீனோ? மாளிகை விளக்கோ?*
*கற்பகத் தருவோ? காட்டிடை மரமோ?*
*விதியே, தமிழச் சாதியை எவ்வகை*
*விதித்தாய்’ என்பதன் மெய்யெனக் குணர்த்துவாய்.*

*ஏனெனில்,*
*சிலப்பதி காரச் செய்யுளைக் கருதியும்,*
*திருக்குற ளுறுதியும் தெளிவும் பொருளின்*
*ஆழமும் விரிவும் அழகும் கருதியும்,*

*‘எல்லையொன் றின்மை’*
*எனும்பொருள் அதனைக்*
*கம்பன் குறிகளாற் காட்டிட முயலும்*
*முயற்சியைக் கருதியும், முன்புநான் தமிழச்*
*சாதியை அமரத் தன்மை வாய்ந்தது என்று*
*உறுதிகொண்டிருந்தேன். ஒருபதி னாயிரம்*
*சனிவாய்ப் பட்டும் தமிழச் சாதிதான்*
*உள்ளுடை வின்றி உழைத்திடு நெறிகளைக்*
*கண்டுஎனது உள்ளம் கலங்கிடா திருந்தேன்.*

*ஆப்பிரிக் கத்துக் காப்பிரி நாட்டிலும்*
*தென்முனை யடுத்த தீவுகள் பலவினும்*
*பூமிப் பந்தின் கீழ்ப்புறத் துள்ள*
*பற்பல தீவினும் பரவி யிவ்வெளிய*
*தமிழச் சாதி, தடியுதை யுண்டும்*
*காலுதை யுண்டும் கயிற்றடி யுண்டும்*
*வருந்திடுஞ் செய்தியும் மாய்ந்திடுஞ் செய்தியும்*
*பெண்டிரை மிலேச்சர் பிரித்திடல் பொறாது*
*செத்திடுஞ் செய்தியும் பசியாற் சாதலும்*
*பிணிகளாற் சாதலும் பெருந்தொலை யுள்ளதம்*

*நாட்டினைப் பிரிந்த நலிவினாற் சாதலும்*
*இஃதெலாம் கேட்டும் எனதுளம் அழிந்திலேன்!*
*விதியே! விதியே! தமிழச் சாதியை*
*என்செயக் கருதி யிருக்கின் றாயடா?*

**- பாரதியார்**

04 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## பூஜ்ஜியத்தில் இருந்து ராஜ்யம்....

என்பது மொட்டு அணிக்குத் தெரியும். அதனால், பெரும்பாலான விடயங்களில் அடக்கி வாசிக்க வேண்டிய தேவை அவர்களுக்கும் உள்ளது.

மொட்டுவின் பாராளுமன்றப் பெரும்பான்மையை வைத்துக்கொண்டுதான் தான் ஆட்சி செய்ய வேண்டும் என்பது ரணிலுக்குத் தெரிந்துதான் இருக்கின்றது. ஆனால், மொட்டு தனக்கு எதிராகச் செயற்படாது என ரணில் கணிப்பதற்கு பல காரணங்கள் உள்ளன. முக்கியமாக திடீர்த் தேர்தல் ஒன்றைச் சந்திக்க மொட்டு தயாராகவில்லை. அரகலய போராட்டத்தினால் ராஜபக்சக்களின் நற்பெயர் படுமோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இதனைப் புனரமைக்க சில காலம் செல்லும் என்பது ராஜபக்சக்களுக்கும் தெரியும் ரணிலுக்கும் தெரியும். ஜனாதிபதி என்ற முறையில் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான அதிகாரம் அடுத்த வருடம் ரணிலின் கைகளுக்கு வந்துவிடும். இது மொட்டுவுக்கு அச்சுறுத்தல்.

‘அரகலய’ போராட்டம் பெருமளவுக்கு ஒடுக்கப்பட்டுவிட்டாலும், அது முழுமையாக இல்லாமல் போகவில்லை. அது உயிர்துடிப்புடன் இல்லாவிட்டாலும், அது உயிருடன்தான் உள்ளது. ரணிலும் அதனைத்தான் விரும்புகின்றார். ராஜபக்சக்கள் அவர்களிடமுள்ள பாராளுமன்றப் பலத்தைப் பயன்படுத்தி தனக்கு எதிராகச் செயற்படுவதற்கு முற்பட்டால் மீண்டும் ‘அரகலய’ தூண்டிவிடுவதற்கான மறைமுகமான திட்டம் ஒன்று ரணிலிடம் இருப்பதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கருதுகின்றன. ராஜபக்சக்களை கைக்குள் வைத்திருப்பதற்கான ஒரு துருப்புச் சீட்டாக அரகலயவை ரணில் பயன்படுத்தலாம் என்ற ஒரு கருத்தும் உள்ளது. இரண்டாவது பிறப்புச் செட்டாக பாராளுமன்றத்தை கலைப்பதற்கான அதிகாரத்தை அடுத்த வருடத்தில் அரணில் தன்னுடைய கைகளில் எடுத்துக் கொள்வார்.

இதனைவிட ராஜபக்சக்கள் தரப்பில் காணப்படும் உள்ளக முரண்பாடுகள், அதிகாரப்போட்டிகளைப் பயன்படுத்திக்கொண்டு 2024 இறுதியில் நடைபெற வேண்டிய ஜனாதிபதித் தேர்தலில் தான் களமிறங்குவதற்கான திட்டம் ஒன்றும் ரணிலிடம் உள்ளதாகத் தெரிகின்றது. இந்தத் தேர்தலை ரணில் விரும்பினால் ஒரு வருடம் முன்கூட்டியே நடத்தவும் முடியும். அதற்கான அதிகாரம் ஜனாதிபதி என்ற முறையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருக்கின்றது.

மொட்டுவின் பிதாமகரான மகிந்த ராஜபக்சவைப் பொறுத்தவரையில் தனது சகோதரர்களில் எவரையும் இன்னொரு ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்க அவர் தயாராகவில்லை. கோட்டாபயவுடன் பெற்றுக்கொண்ட அனுபவம் போதும் என அவர் நினைக்கிறார். பஸில் ராஜபக்சவுக்கு ஜனாதிபதிக் கனவு இருந்தாலும் அவரைக் களமிறக்குவது ‘அரகலய’ போராட்டத்தைவிட மோசமான நிலையை ஏற்படுத்திவிடும் என்பது மகிந்தவின் கணிப்பு. ஏனெனில் பஸில் மீதும் அதிகளவு குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

இந்த நிலையில் அவரது தெரிவு அவரது ‘இளவரசர்’ நாமல் ராஜபக்சதான். ஆனால், 2023 இல் அல்லது 2024 இல் நடைபெறக்கூடிய ஜனாதிபதித் தேர்தலில் நாமலை களமிறக்க மகிந்த விரும்பவில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றது. அரகலய போராட்டத்தின் சூடு தணியாத நிலையில் நாமலை களமிறக்குவது ஆபத்தானதாகிவிடலாம் என்பது முதலாவது காரணம். நாமலுக்கு மேலும் அனுபவம் – முதிர்ச்சி தேவை என்பது இரண்டாவது காரணம்.

ராஜபக்ச குடும்பத்தை சாராத ஒருவரை களமிறக்க முற்பட்டால் கட்சியையே இழக்க வேண்டிய நிலை வரலாம் என்ற அச்சமும் மகிந்தரிடம் உள்ளது. சுதந்திரக் கட்சியை மைத்திரியிடம் பறிகொடுத்தது இதில் அவருக்கு நல்ல அனுபவம். அதனால், ராஜபக்ச குடும்பத்தை சாராத எவரையும் மொட்டு கட்சியின் சார்பில் அவர் களமிறக்கமாட்டார்.

இவ்வாறான பின்னணியில் மீண்டும் ஒரு முறை ரணிலை ஜனாதிபதியாக்கி –ரணிலின் அடுத்த பதவிக்காலத்தின் முடிவில் நாமலை களமிறக்கலாம் என மகிந்தர் சிந்திப்பதாகத் தெரிகின்றது. தற்போது காணப்படும் அரசியல் சூழ்நிலையில் கட்சியைக் காப்பாற்றுவதற்கும், கட்சித் தலைமையை பாதுகாப்பாக தமது வாரிசான நாமலிடம் ஒப்படைப்பதற்கும் இவ்வாறான ஒரு உபாயத்துடன்தான் மகிந்த சிந்திப்பதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் சண்டே டைம்ஸ் ஆங்கில வார பத்திரிகைக்கு மஹிந்த ராஜபக்ச வழங்கிய நேர்காணல் ஒன்றில் தற்போதைய நிலைமையில் நாட்டை வழி நடத்திக் கொண்டு செல்லக்கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க தான் என புகழாரம் சூட்டியிருந்தது கவனிக்கத்தக்கது.

கடந்த ஜூன் 9 ஆம் திகதி மகிந்த ராஜபக்ச பிரதமர் பதவியைத் துறக்கும் வரையில் அதிர்ஸ்டற்ற ஒருவராகவே ரணில் கருதப்பட்டார். ஆனால், அதற்குப் பின்னர் சஜித் பிரேமதாசவின் தயக்கத்தின் காரணமாகவும், மாற்றமடைந்த அரசியல் நிலைமைகளாலும் ரணிலுக்கு வெள்ளி திசை ஆரம்பமாகியுள்ளது. பூஜ்ஜியத்திலிருந்து அவர் இராஜ்ஜியம் ஒன்றை அமைத்துக்கொண்டமைக்கு அதிஸ்ட்டம் மட்டும் காரணமல்ல. அரசியல் கள நிலைமைகளை புரிந்துகொண்டு அதற்கேற்ற அவரது நிதானமான காய்நகர்த்தல்களும் இதற்குக் காரணம்.

அரகலிய போராட்டம் கலைந்துபோனமைக்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று: அதற்கு எதிராக ரணில் முன்னெடுத்த ஒடுக்குமுறைகள். படைகளையும், சட்டங்களையும் அவர் கடுமையாகப் பயன்படுத்தினார். மனித உரிமைகள் குறித்த கரிசனைகளை கவனத்திற்கொள்வதாகச் சொல்லிக்கொண்டே அதற்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுத்தார்.

இரண்டாவது: போராட்டம் தீவிரமடைவதற்கு காரணமாக இருந்தது அத்தியவசியப் பொருட்களுக்கான விலை உயர்வும், அவற்றுக்குக் காணப்பட்ட தட்டுப்பாடும். இவைதான் மக்களை வீதியில் இறக்கியது. ரணில் அதிகாரத்துக்கு வந்த பின்னர் தட்டுப்பாடு பெருமளவு குறைந்திருக்கின்றது. விலைவாசியும் வீழ்ச்சியடைந்திருக்கின்றது. இந்த நிலையில் மக்கள் சீற்றமடைந்து வீதிகளில் இறங்குவதற்கான காரணங்கள் இல்லாமல் போயுள்ளன. அதனால் தான் ஓகஸ்ட் ஒன்பதாம் தேதி முன்னெடுக்கப்பட்ட போராட்டம் படுதோல்வியல் முடிவடைந்தது. ரணிலின் செல்வாக்கை இது ஓரளவு அதிகரித்திருக்கின்றது.

அரசியல் ரீதியாக சர்வகட்சி அரசு என்பது இப்போது இல்லாமல் போயுள்ளது. தேசிய அரசை அமைக்கப்போவதாக ரணில் இப்போது சொல்கின்றார். இதனைப் பயன்படுத்தி அமைச்சர் பதவிகளை முன்வைத்து எதிரணியினரை பிளவுபடுத்தும் உபாயம் ஒன்றை ரணில் இப்போது முன்னெடுக்கின்றார். இதனால் எதிரணிகள் பலவீனப்பட வாய்ப்புள்ளது. இந்த நிலையில், அடுத்த வருடத்தில் – அதாவது ஒரு வருடம் முன்னதாகவே ஜனாதிபதித் தேர்தலை மொட்டு அணியின் ஆதரவுடன் நடத்தினால், சஜித் தடுமாறுவார். ரணிலுக்கான வெற்றிவாய்ப்பு அதிகமாக இருக்கும். மேற்கு நாடுகளும் இதனை விரும்பலாம். இதற்கான உபாயம் ஒன்றை வகுத்து ரணில் விக்கிரமசிங்க இப்போது காய்களை நகர்த்திக் கொண்டு இருக்கின்றார் .



# தமிழ்நாட்டு செய்திகள்
## வணக்கம் தமிழகம்

# உடல் நலம் பெற்று துடிப்பான மனிதராக வலம் வர வேண்டும்
### விஜயகாந்துக்கு முதலமைச்சர் பிறந்தநாள் வாழ்த்து



தேமுதிக தலைவர் விஜயகாந்துக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

தேமுதிக தலைவர் விஜயகாந்த் இன்று தனது 70-வது பிறந்தநாளை கொண்டாடி வருகிறார். இவருக்கு பல்வேறு அரசியல் கட்சி தலைவர்களும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் தேமுதிக தலைவர் விஜயகாந்துக்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் தனது டுவிட்டரில், ‘என் இனிய நண்பரும் தேமுதிக தலைவருமான விஜயகாந்த் அவர்களுக்கு எழுபதாவது வயது இன்று. அவருக்கு இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். உடல் நலம் பெற்று - துடிப்பான மனிதராக அவர் வலம் வர வேண்டும் என்பதே எனது ஆசை. நலம் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகிறேன்’ என்று அதில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.

# தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்
### மத்திய மந்திரிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம்



இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய மந்திரிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதி உள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கருக்கு எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது,

கடந்த 22.8.2022 அன்று நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் இருந்து மீன்பிடிக்க சென்ற 10 தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இது, கடந்த ஜுன் மாதத்தில் இருந்து தொடர்ச்சியாக நடைபெறும் 5-வது நிகழ்வாகும். இலங்கை கடற்படையினரின் இத்தகைய நடவடிக்கைகள் மீனவர்களின் வாழ்வாதாரத்தை வெகுவாக பாதித்துள்ளது. தற்போது வரை தமிழகத்தைச் சேர்ந்த 94 மீன்பிடி படகுகள் இலங்கை வசம் உள்ளன. அவற்றின் உரிமையாளர்கள் இலங்கை நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி அவர்களது படகிற்கான உரிமையை கோர வேண்டுமென்ற நிபந்தனையின் பேரிலேயே கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

தற்போது இலங்கையில் நிலவும் சூழ்நிலை காரணமாக அவர்கள் இலங்கை நீதிமன்றத்தில் ஆஜராவதில் இருந்து விலக்களிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களையும், மீன்பிடி படகுகளையும் விடுவிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என அதில் கூறப்பட்டுள்ளது.

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த நிலையில் ஒன்றரை கோடி ரூபா கஞ்சா சிக்கியது
### பட்டுக்கோட்டையில் காவல்துறை நேற்றிரவு அதிரடி



நேற்று இரவு பட்டுக்கோட்டை காவல்துறை யினர் ஆந்திராவில் இருந்து கொண்டுவரப்பட்ட 600 கிலோ கஞ்சாவை கைப்பற்றிய சம்பவம் தஞ்சையை பரபரப்பாக்கியுள்ளது.

நேற்று மாலை ஆந்திராவிலிருந்து பட்டுக்கோட்டை வழியாக இலங்கைக்கு கடத்திச் செல்லப்பட இருந்த 600 கிலோ கஞ்சாவை பட்டுக்கோட்டை காவல் துணை கண்காணிப்பாளர் பிரித்விராஜ் மேற்பார்வையில் தனிப்படை உதவி ஆய்வாளர் சந்திரசேகர் தலைமையிலான காவல் துறை லொறியை நோட்டமிட்டு பிடித்ததில் காரில் சொகுசு அறை தயாரிக்கப்பட்டு அதன் உள்ளே ஒன்றரைக் கோடி ரூபா மதிப்புள்ள 600 கிலோ கஞ்சாவை கடத்தி வந்த சம்பவம் காவல் துறை மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பேராவூரணி காவல் நிலையத்திற்கு நேற்று இரவு விரைந்த தஞ்சை மாவட்ட எஸ்பி ரவளிப்பிரியா இதில் சம்பந்தப்பட்ட அனைத்து குற்றவாளிகளையும் பிடிக்க வேண்டும் யாரும் தப்பி விடக்கூடாது.

உண்மையான குற்றவாளியை விரைந்து பிடித்து குற்றவாளிகளை சட்டத்தின் நிறுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளார். அதன்படி உண்மை குற்றவாளிகளையும் மேலும் இதில் வேறு யாரும் தொடர்பில் இருக்கிறார்களா என்பதை கண்டறிய விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சுறா துடுப்புகள் இலங்கை வழியாக சீனாவுக்கு கடத்தப்படுவது அதிகரிப்பு
### தமிழக கடல் பகுதியில் அரிதாகிவரும் சுறா மீன்கள்



தமிழகத்திலிருந்து இலங்கை வழியாக சீனாவுக்கு சுறா துடுப்புகளை கடத்துவது அதிகரித்து வருகிறது. இதனால் தமிழக கடல் பகுதியில் சுறாக்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது.

உலகளவில் 480 வகையான சுறா மீன்கள் உள்ளன. தமிழகத்தில் வங்காள விரிகுடா, மன்னார் வளைகுடா மற்றும் பாக் ஜலசந்தி கடல் பரப்பில் கலங்குச் சுறா, கணவாய் சுறா, கல்லு சுறா, கொண்டையன் சுறா, கொம்பன் சுறா, தாளன் சுறா, பஞ்சு சுறா, பால் சுறா, திமிங்கல சுறா, ஈட்டிபல் சுறா, கங்கை சுறா, சிறுபல் சுறா உள்ளிட்ட சுறாக்கள் காணப் படுகின்றன.

உலகளவில் ஆண்டொன்றுக்கு 10 கோடி சுறா மீன்கள் பிடிக்கப்ப டுகின்றன. தற்போது சுறா மீன்கள் பிடிக்கப்படும் வேகத்துக்கும், அவை இனப்பெருக்கம் செய்யும் வேகத்துக்கும் இடைவெளி அதிகரித்துள்ளது. இதனால் சுறா மீன்களின் எண் ணிக்கை குறைந்து, அரிதாகிவரும் மீனினமாக மாறியுள்ளன.

பொதுவாக மக்கள் சுறா மீனை உணவாக எடுத்துக் கொள்வது குறைவு. சுறாக்கள் அதிக அளவில் பிடிக்கப்படுவதற்கு முக்கிய காரணம் கிழக்கு ஆசிய நாடுகளில் குறிப்பாக சீனாவில் மருத்துவக் குணங்கள் இருப்பதாகக் கருதி சுறாவின் துடுப்புகள் கொண்டு தயாரிக்கப்படும் சூப்புக்கு அதிக கிராக்கி நிலவுவதுதான். இந்தியாவிலிருந்து மட்டும் 2012-13-ம் நிதியாண்டில் ரூ.343 கோடி அளவுக்கும், 2013-14-ல் ரூ.385 கோடி அளவுக்கும் சுறா மீன்களுடைய துடுப்புகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

இந்தியாவில் சுறாக்களின் எண்ணிக்கை குறையத் தொடங் கியதால் 6.2.2015-ல் சுறா மீன் துடுப்புகளை ஏற்றுமதி தடை விதிக்கப்பட்டது. மீறினால் வன உயிரினச்சட்டப் பிரிவு 1-ன் கீழ் அதிகபட்சமாக 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என் அறிவிக்கப்பட்டது.

ஆனாலும் தடையை மீறி ராம நாதபுரம் மாவட்டம் வழியாக இலங்கைக்கு சுறாவின் துடுப்புகள் கடத்துவது அதிகரித்து வருகிறது. பின்னர் இலங்கையிலிருந்து எளிதாக சீனாவுக்கு கொண்டு செல்லப்படுகிறது. ராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் கடந்த ஓராண்டில் ஆயிரம் சுறா மீன் களின் துடுப்புகள் பறிமுதல் செய்யப்பட்டு, வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

# அ.தி.மு.க., பா.ஜ.க. கட்சிகளை வேறுபடுத்தி பார்க்கவில்லை
### துரை வைகோ கருத்து



அதிமுக, பாஜக கட்சிகளை வேறுபடுத்தி பார்க்கவில்லை என மதிமுக தலைமை நிலையச் செயலாளர் துரை வைகோ தெரிவித்தார்.

சென்னை கோயம்பேட்டில் உள்ள தேமுதிக தலைமை அலுவலகத்தில் அக்கட்சியின் பொருளாளர் பிரேமலதா விஜயகாந்தை துரை வைகோ நேற்று சந்தித்துப் பேசினார். அப்போது, மதிமுக பொதுச் செயலாளர் வைகோ குறித்த ஆவணப் படதிரையிடலுக்கான அழைப்பிதழை பிரேமலதா மற்றும் தேமுதிக துணைச் செயலாளர் எல்.கே.சுதீஷ் ஆகியோருக்கு வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் துரை வைகோ கூறியதாவது: மறைந்த முன்னாள் முதல்வர் எம்ஜிஆரைபோல் வள்ளல் மனம் படைத்தவர் விஜயகாந்த். அரசியலுக்கு அப்பாற்பட்ட நல்ல மனிதர். அவர் பூரண குணமடைந்து எழுச்சியுடன் தமிழக அரசியலில் வலம்வர வேண்டும்.

மதிமுக பொதுச் செயலாளர் வைகோவின் பொது வாழ்வு குறித்த ஆவணப் படத்தை வெளியிட இருக்கிறோம். இது வைகோவின் 56 ஆண்டு கால சாதனைகள், தியாகங்களை உள்ளடக்கிய 75 நிமிட ஆவணப் படம். இதை முதல்வர் தொடங்கி வைக்கிறார்.

அரசியலுக்கு அப்பாற்பட்டு தந்தைக்கு மகன் செய்ய வேண்டிய ஒன்றாக இதை செய்துள்ளேன். இந்த படத்தில் யாரையும் தாக்கிப் பேசவில்லை. இதற்கான அழைப்பிதழை தேமுதிக நிர்வாகிகளிடம் வழங்கினோம்.

அதிமுக, பாஜக தவிர்த்து அனைத்து இயக்கங்களுக்கும் அழைப்பிதழ் வழங்கப்பட்டுள்ளது. இன்றுள்ள அரசியல் சூழலை பொறுத்தவரை சனாதன சக்திகள் திராவிட கொள்கைளைத் தாண்டி வேரூன்றும் முயற்சியில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதிமுக, பாஜகவை நாங்கள் வேறுபடுத்தி பார்க்கவில்லை. ஒன்றாகவே பார்க்கிறோம். அதே நேரம் அரசியல் தவிர்த்து நண்பர்களாகவே இருக்கிறோம். அதிமுகவிலும் வைகோவை மதிக்கின்ற தலைவர்கள் இருக்கிறார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.



# நல்லூரானின்
## இரதோற்சவம் இன்று.....



### ஆன்மா இலயிக்கும் ஆன்மீகம்
























வரலாற்று சிறப்பு மிக்க நல்லையம்பதி அலங்கார கந்தசுவாமி தேவஸ்தான மகோற்சவத்தின் இரதோற்சவம் இன்று காலை இடம் பெற்றது.

வசந்த மண்டபத்தில் விஷேட அபிஷேகங்கள், ஆராதனைகள் இடம் பெற்று, பீடத்தில் வீற்று உள்வீதியுடாக வலம் வந்து ஆறுமுகப்பெருமான், வள்ளி, தெய்வானை, சமேதராக தேரில்வீற்று பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

இவ்வாலயத்தில் மஹோற்சவம் கடந்த 02.08.2022 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 26.08.2022 அன்று தீர்த்தத்திருவிழாவுடன் திருவிழா அனைத்தும் நிறைவடையும்.

இவ் மஹோற்சவத்திற்கு நாட்டின் பலபாகங்களில் இருந்து பக்தர்கள் வருகை தந்து இரதோற்சவத்தில் கலந்துகொண்டு நல்லையம்பதி அலங்காரக்கந்தனின் அருட்கடாச்சத்தினை பெற்றுச்சென்றனர்.

## காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களில்

# காணாமல் போன பெண்களின் எதிர்காலம்!





**21 மில்லியன்** மக்களைக் கொண்ட ஒரு நாடு, காணாமல் போனவர்களின் எண்ணிக்கையில் உலகின் இரண்டாவது அதிக எண்ணிக்கையைக் கொண்ட நாடாக மதிப்பிடப்படும்போது, கட்டாயமாக காணாமல் போதல் என்பது விவாதத்திற்கான குறிப்பிடத்தக்க சொல்லாக மாறுகிறது.

26 ஆண்டுகளாக நீடித்த சிவில்–இராணுவ மோதலை எதிர்கொண்ட இலங்கை, 1983 ஆம் ஆண்டு தமிழ் இனப்படுகொலையுடன் தொடங்கிய பாரியளவிலான கடத்தல்கள் மற்றும் பலவந்தமாக காணாமல் போதல்களால் சுமத்தப்பட்டுள்ளது. முழுவதும் தொடர்ந்து, 2009 ஆம் ஆண்டு ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்த பின்னரும், 2015 வரை, அதிகாரப்பூர்வமாகப் பதிவுசெய்யப்பட்ட காணாமல் போனவர்களின் எண்ணிக்கை 60,000 முதல் 100,000 வரை இருந்தது, இது நாட்டின் பெரிய அளவிலான மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களைச் சித்தரிக்கிறது.

இந்தப் புள்ளி விபரங்கள் பாரிய அளவில் காணாமல் போனவர்களின் ஈர்ப்பை விளக்கும் அதே வேளையில், காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு ஒரு விசித்திரமான கொடுமையையும் வேதனையையும் ஏற்படுத்துகின்றன என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

எந்தவொரு கட்டத்திலும் பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுவதை ‘கடந்தகால குற்றம்’ என்று வகைப்படுத்த முடியாது, ஆனால் இது தற்போது நடந்து வரும் மனித உரிமை மீறலாகும். ஆட்கள் காணாமல் போவது என்பது பாரதூரமான மனித உரிமை மீறல் மற்றும் சட்டத்தின் ஆட்சி மீறல் மட்டுமல்ல, பாதிக்கப்பட்ட குடும்பங்களின் உளவியல்–சமூக–பொருளாதாரப் பிரச்சனையும் கூட ஆகும்.

இலங்கை – இந்த நிகழ்வுக்கு விதிவிலக்கு அல்ல – கடந்த கால மோதல்கள், இறப்புகள், கொலைகள், பாரிய இடப்பெயர்வுகள் மற்றும் காணாமல் போனவர்கள் ஆகியவற்றின் பின்விளைவுகளுக்கு தீர்வு காண்பதற்கான வழிமுறைகளை உருவாக்குவதில் இன்னும் சவால்களை எதிர்கொள்கிறது. இலங்கையில்,25.8% குடும்பங்கள் பெண் தலைமைத்துவம் கொண்டவை. அவர்களில் பெரும்பாலானவர்கள் காணாமல் போன கணவர்களைக் கொண்ட குடும்பங்களைக் கொண்டவர்கள்.

உடல் மற்றும் மன ஆரோக்கியம், வேலை, பாதுகாப்பு, வீட்டுவசதி மற்றும் குடும்ப வாழ்க்கைத் தரம் என அவர்களின் வாழ்க்கையின் அனைத்துக் களங்களிலும் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டதன் பாதிப்புகள் இந்தப் பெண்களால் உணரப்படுகின்றன. ஆண்–தலைமை குடும்பங்களைக் கொண்ட மற்றவர்களுடன் ஒப்பிடும் போது இருக்கும் ஏற்றத்தாழ்வுகள் தெரியும், சோகத்தின் சுமைகள் மற்றவர்களை விட அதிகமாக சிலருக்கு விழும். ஒற்றைத் தாய்மார்கள், விதவைகள், சகோதரிகள் மற்றும் மகள்கள் பாலியல் துன்புறுத்தல், கற்பழிப்பு, வன்முறை, அடிமைத்தனம் மற்றும் கட்டாய இடம்பெயர்வு ஆகியவற்றிற்கு தள்ளப்படுகிறார்கள்.

இருப்பினும், இந்தப் பெண்களுக்கு நீதிக்கான அணுகல் இல்லை என்பது மட்டுமல்லாமல், அவர்கள் தங்கள் கடந்த காலத்தை நினைவுகூருவதையும், தங்கள் குடும்ப உறுப்பினர்களின் இழப்பை நினைவுகூருவதையும் தடுக்கிறார்கள். தெளிவின்மையில் வாழ்கிறார்கள், அவர்கள் தங்கள் வன்முறை கடந்த காலத்தை நினைவில் வைத்து மறந்து முரண்பட்ட நினைவுகளுடன் சண்டையிடுகிறார்கள். நினைவில் கொள்ள வேண்டிய அவசியம் அவர்களின் மனதில் வலுவாக உள்ளது; ஆயினும்கூட, இந்த நினைவுகளை தற்காலிகமாக அடக்கும் ஒரு சமமான சக்திவாய்ந்த அழுத்தம் உள்ளது, இது பயம் மற்றும் பாதிக்கப்படும் அச்சுறுத்தல் வடிவத்தில் வருகிறது.

கடத்தப்பட்ட குடும்ப உறுப்பினர்களைக் கொண்ட இந்தப் பெண்கள் தங்கள் இழப்புக்காக வெளிப்படையாக துக்கம் கொண்டாடும் சுதந்திரத்தைப் பெறவில்லை என்றாலும், அவர்கள் கடுமையான அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றனர் மற்றும் அரசாங்கம் மற்றும் அதன் பாதுகாப்புப் படைகளின் கொடுங்கோல் நடவடிக்கைகளால் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

ஆயுதப் போருக்குப் பின், முப்பதாண்டு கால மோதலை அடையாளப்படுத்தும் வகையில், ஆயிரக்கணக்கான சிறுபான்மைத் தமிழர்கள் உயிர் இழந்த மண்ணில், தமிழ்க் கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான அவர்களின் வெற்றியை நினைவுகூரும் வகையில், அரசாங்கம் தொடர்ச்சியான நினைவுச் சின்னங்களை நிர்மாணித்தபோது, அது உடனடியாக சிறுபான்மையினரை கடுமையாகத் தடை செய்தது. நினைவக நினைவுச்சின்னங்களை கட்டுவது அல்லது இறந்த மற்றும் இழந்த குடும்பங்களுக்கு கல்லறைகளை வைப்பதில் இருந்து பொதுமக்கள். ஒரு பொது சடங்கு அல்லது சடங்கு மூலம் இழப்பை நினைவுகூருவதற்கு பெண்களுக்கு தடை விதிக்கப்பட்டது, அல்லது காணாமல் போன கணவர்கள், மகன்கள் மற்றும் சகோதரர்களின் புகைப்படங்களை நினைவில் கொள்வதற்கான ஒரு வழியாக வெளிப்படையாக சித்தரிக்க அனுமதிக்கப்படவில்லை.






சோபிகா
கிருஷ்ணமூர்த்தி

புதைகுழிகள் மற்றும் நினைவுச்சின்னங்கள் கடந்தகால கொடுமைகளை மக்களுக்கு நினைவூட்டினாலும், குணப்படுத்துவதற்கும், சமரசம் செய்வதற்கும், அமைதி செய்வதற்கும், உள் அமைதி மற்றும் வெளி உலகத்துடன் அமைதி இருப்பதற்கு நினைவில் கொள்வது அவசியம். இந்த துன்புறுத்தப்பட்ட பெண்களின் உள் அமைதி சமூகத்துடன் அவர்களின் அமைதிக்கு ஒரு முக்கியமான காரணியாகும். அமைதி விரைவில் விடியாது; அமைதி என்பது ஒரு செயல்முறை. ஒரு முழு சமூகமும் காயங்களுடன் தனிமைப்படுத்தப்பட்டு போரின் விளைவுகளைச் சுமக்கும் போது அமைதி என்பது கேள்விக்குறியாகிறது. கேட்பதற்கு இடமில்லாமல் தனிமைப்படுத்தப்படுவது கடந்தகால வன்முறை மற்றும் பலிவாங்கலை விட மோசமானது.

குடும்பம் காணாமல் போன பெண்களுக்கு நினைவில் இருக்கவும், சொல்லவும், உரையாடவும் கதைகள் உள்ளன. நினைவாற்றல் என்பது நினைவுகளைப் பாதுகாக்க ஒரு பயனுள்ள கருவியாகும். வன்முறையான கடந்த கால நிகழ்வுகளை ஒரு சமூகம் நினைவுகூரும் விதம் அமைதியைக் கட்டியெழுப்புவதற்கான முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக வெளிப்படுகிறது. எனவே, இந்தப் பெண்கள் தங்கள் அமைதியை மீட்டெடுக்கவும், நல்லிணக்கத்தை நோக்கி இட்டுச் செல்லவும், அவர்களின் கடந்த காலத்தை நினைவுகூரவும், விவரிக்கவும் சுதந்திரம் பெறுவது முக்கியம்.

நினைவுகூருதல் கலாச்சாரத்திற்கான ஆக்கபூர்வமான அணுகுமுறையானது சமாதானத்தை கட்டியெழுப்புதல் மற்றும் நல்லிணக்கத்தில் ஒரு முக்கியமான துறையாகும். கடந்த காலத்தை நினைவுகூரும் கலாச்சாரம் சமூகத்தில் தற்போதைய மோதல்களை நன்கு புரிந்துகொள்ள உதவுகிறது மற்றும் அவற்றின் மாற்றத்திற்கான ஆக்கபூர்வமான வழிகளைக் கண்டறிய உதவுகிறது.

உண்மையும் நீதியும் நல்லிணக்கத்திற்கு தனித்தனியானவை அல்ல அவை அதன் முக்கிய பகுதிகள். எனவே, பாதிக்கப்பட்டவர்கள் சமரசம் செய்து கொள்ள, உண்மையைப் பேசுவது முக்கியம். உரையாடல்கள் வன்முறை மற்றும் மீறல்களின் கடுமையான நினைவுகளைத் தூண்டுவதன் மூலம் சமூக உள்ளடக்கத்தை ஊக்குவிக்கின்றன, மேலும் வரலாற்றில் எதிர்மறையான நிகழ்வுகளின் மூல காரணங்களைப் புரிந்துகொள்வதன் மூலம் சமரசம் செய்ய உதவுகின்றன.

எனவே, பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டதால் குடும்ப உறுப்பினர்களை இழந்த பெண்களுக்கு உரையாடல்களில் ஈடுபடுவதற்கும், அவர்களின் கடந்த காலத்தைப் பேசுவதற்கும், நினைவுகளைப் பகிர்ந்து கொள்வதற்கும் – அவர்களின் குரல்கள் கேட்கப்படுவதற்கும் இடமளிப்பது மிகவும் முக்கியமானது.

உரையாடல்கள் மற்றும் வாய்வழி விவரணைகள் மூலம் கடந்த கால நினைவுகளை நினைவுபடுத்துவது குடும்பங்களுக்கு அதிர்ச்சியைக் கடப்பதற்கும், அமைதியான எதிர்காலத்திற்காக வன்முறை கடந்த காலத்துடன் சமரசம் செய்வதற்கும் உதவும்.

கடுமையான நினைவுகள் மற்றும் மனித உரிமை மீறல்களைத் தூண்டுவதற்கும், மோதலின் மூல காரணங்களைப் புரிந்துகொள்வதற்கும் தீர்வு காண்பதற்கும், நல்லிணக்கம் மற்றும் அமைதியை அடைவதற்கும் உரையாடல் ஒரு கருவியாகும். இது பழிவாங்கும் சுழற்சியை நினைவுகூருவதன் மூலம் உடைத்து, ஆக்கிரமிப்பு மற்றும் விரக்தியிலிருந்து நல்லிணக்கத்தை நோக்கிச் செல்லப் பயன்படுத்தப்படும் ஒரு உத்தியாகும்.

கடந்த கால உரையாடல்கள், அனுபவங்களை ஆராய்ந்து, பகிர்வதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களின் காயங்களைக் குணப்படுத்தும் அதே வேளையில், நிகழ்கால மற்றும் வருங்கால சந்ததியினரைக் கற்றுக்கொள்வதற்கான ஆதாரங்களை உருவாக்குகின்றன, அனுதாப உணர்வை உருவாக்க அல்ல, மாறாக வன்முறை மற்றும் அமைதியை அழிப்பதைத் தடுக்கும்.

உரையாடல்கள் நடைபெற வேண்டுமானால், இந்த பாதிக்கப்பட்ட பெண்களின் குரல்கள் கேட்கப்பட வேண்டும். உணர்வுகள் ஒரு நபரின் ஆளுமையுடன் இணைக்கப்பட்டுள்ளன, இது ஒரு நபரின் உணர்ச்சிகள், அணுகுமுறைகள் மற்றும் நடத்தைகளை உருவாக்குகிறது. வரலாற்றுக் கருத்துக்கள் ஒரே மாதிரியானவை, இந்தப் பெண்களின் கடந்தகால கதைகளில் கவனம் செலுத்தாமல் உண்மையான நல்லிணக்கத்தை அடைய முடியாது. அவர்களின் வன்முறை கடந்த காலத்தை நினைவுகூறவும், அவர்களின் இழப்பை நினைவுகூறவும் அவர்களுக்கு இடம் கொடுப்பது அவர்களுக்கு உள் அமைதியையும் மற்றவர்களுடன் அமைதியையும் பெறும்.

நீதி மற்றும் அமைதிக்காக காத்திருக்கும் இந்தப் பெண்களின் குரல்கள் நாட்டில் தொடர்ந்து எதிரொலிக்கின்றன.



# ஆடுகளங்களின் அதிர்வுகள்

ஆடுகளம்

| இராஜேஸ் மணாளன்

## ஒரு நட்சத்திரத்தின் அஸ்தமனம்



டென்னிஸ் உலகின் அசாதாரண விளையாட்டு வீராங்கனையான செரினா வில்லியம்ஸ் களத்திலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். இவரது 27வருட கால விளையாட்டுக் காலத்தில், ஒற்றையர் ஆட்டத்தில், 23 தடவைகள் கிரான்ட் ஸ்லாம் போட்டிகளை வென்றெடுத்திருப்பது, எல்லோராலும் முடிந்த ஒன்றல்ல..பரிசுத் தொகையாக 94,588,910 சம்பாதித்திருப்பது, நம் புருவங்களை உயர்த்த வைக்கும்.

தனது 17வது வயதில்,(1999) முதலாவது கிரான்ட் ஸ்லாம் வெற்றியாக, யு.எஸ் ஓபன் போட்டியில் வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்தார். அப்பொழுது பெண்கள் டென்னிஸ் உலகில் முதலாம் இடத்திலிருந்த மொனிக்கா என்பவரை, காலிறுதியில் வெளியேற்றி, சுவிஸ் நட்சத்திரமான மார்ட்டீனா ஹிஞ்சஸ் என்பவரை இறுதி மோதலில் தோற்கடித்து, கிண்ணதை்தை வென்றெடுத்து, முழு உலகையும் ஆச்சரியத்திற்கு உள்ளாக்கினார் இந்தப் 17வயது வீராங்கனை..

வயிற்றில் சிசுவோடு(8 வாரங்கள்) 2017இல் விளையாடிய இவர், எட்டாவது தடவையாக, அவுஸ்திரேலிய ஓபனை வென்றது, எல்லோரையும் அதிசயப்பட வைத்தது. இனிவரும் யுஎஸ் ஓபன் போட்டியில் பங்கேற்றுவிட்டு, டென்னிஸ் உலகிற்கு குட்பை சொல்கிறார்,

இந்த அமெரிக்க , 40வயது டென்னிஸ் புயல்!! இவரது 42 வயதான வீனஸ் வில்லியம்ஸும், டென்னிஸ் உலகில் கொடிகட்டிப் பறந்தவர்தான்!



## பளு தூக்கல் போட்டியில் யாழ். இளைஞர்

தேசிய ரீதியான பளு தூக்கல் போட்டியில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞர் புதிய சாதனைகளை படைத்துள்ளார்.

தேசிய ரீதியில் கடந்த 06ஆம் திகதி பண்டாரகம பகுதியில் இடம்பெற்ற போட்டியில் 25 மாவட்டங்களையும் சேர்ந்த 44க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்த போட்டியில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து ஒரே ஒருவராக யாழ்ப்பாணம் தென்மராட்சி பகுதியை சேர்ந்த சற்குணராசா புசாந்தன் கலந்து கொண்டு மூன்று பிரிவுகளில் நடைபெற்ற போட்டியில் மூன்றிலும் வென்று , மூன்று தங்க பதக்கங்களை பெற்றுக் கொண்டுள்ளார்.120 கிலோவிற்கு மேற்பட்டோருக்கான பிரிவில் கலந்து கொண்ட இவர், squat பிரிவில் 330 கிலோ கிராமையும் , bench-press பிரிவில் 175 கிலோ கிராமையும், deadlift பிரிவில் 261 கிலோ கிராமையும் தூக்கி வெற்றி பெற்றுள்ளார்.

இதில் squat மற்றும் dead-lift பிரிவில் புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார். அத்துடன் குறித்த போட்டியில் மொத்தமாக 766 கிலோ கிராமை தூக்கி புதிய சாதனையையும் படைத்துள்ளார்.



## 100 ஓவர் ஆட்டத்தில் முதல் நூறு

ஒரு நாள் ஆட்டம் என்ற குழுவில், ரி20, 50 ஓவர்கள் ஆட்டங்களுடன் 100 ஓவர் ஓட்டமும் புதிதாக இணைந்துள்ளது.

இந்த 100 பந்து கிரிக்கெட்டில் சதம் விளாசிய முதல் வீரர் என்ற சாதனை இளம் வீரரான வில் சிமித் என்பவரால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இங்கிலாந்து வீரரான இவர், பர்மிங்ஹாம் பீனிக்ஸ் என்ற கழகத்திற்காக விளையாடி வருகிறார்.

50 பந்துகளை எதிர்கொண்ட இவர் மொத்தம் 101 ஓட்டங்களை ஆடியெடுத்துள்ளார். இதில் 8பௌண்டரிகளும் 6 சிக்ஸர்களும் அடங்கும்.

## வடக்கில் ஒரு சுற்றுப்போட்டி

தமிழி அமைப்பின் ஏற்பாட்டில் யாழ். மாநகர சபை இணை அனுசரனையுடனும் யாழ். மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் அனுமதியுடனும் இந்த சுற்றுப்போட்டியானது யாழ் மண்ணில் நடத்தப்படுகின்றது. இந்தச் சுற்றுப்போட்டியை பிறைடஸ் பிரீமியர் லீக்-2022 என்று அழைக்கிறாாகள்.

இதற்குப் பொருத்தமான இடமாக யாழ்ப்பாணம் இந்துகல்லூரி சபாலிங்கம் அரங்கத்தை தேர்வு செய்துள்ள்ளார்கள்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக ஐஆஇ தமிழ் ஊடக வலையமைப்பின் தலைவர் கந்தையா பாஸ்கரன் கலந்து கொள்ள, சிறப்பு விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரி அதிபர் ரட்ணம் செந்தில்மாறன் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த சுற்றுப்போட்டியில்180 க்கு மேற்பட்ட வீரர்களுடன் 12 அணிகள் பங்குபற்றவுள்ளன. இந்தப் போட்டியில் வெற்றி பெறுவோருக்கான பரிசு விபரங்கள் பின்வருமாறு..

வெற்றியாளர் 1000000.00/=
இரண்டாம் இடம் : 500000.00/=
மூன்றாம் இடம்: 200000.00/=
நான்காவது இடம்: 100000.00/=

இந்த சுற்றுப்போட்டிக்கான பிரதான அனுசரணையை IBC தமிழ் ஊடக வலையமைப்பு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## ஆரம்பத் திகதியில் மாற்றம்

கட்டார் நாட்டில் நவம்பர்21இல் தொடங்கத் திட்டமிட்டிருந்த பீஃபா உதைபந்தாட்டக் கிண்ணத் திருவிழா 20ஆம் திகதியே ஆரம்பிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. , எதிர்வரும் நவம்பர், டிசம்பர் மாதங்களில் சர்வதேச உதைபந்தாட்டச் சங்கங்களின் அமைப்பு(பீபா) கட்டார் நாட்டில் இந்தப் போட்டிகளை நடாத்துகின்றது. மொத்தம் 32 அணிகள் பங்கேற்கின்றன. 8 பிரிவுகளாக அணிகள் விளையாடுகின்றன. கட்டாரின் 8 மைதானங்களில் இந்தப் போட்டிகள் இடம்பெறுகின்றன.

முதல் மோதலாக அதிதி நாடான கட்டார், ஈக்குவடோரை எதிர்த்து விளையாடுகின்றது. இந்த மோதல் 20ஆம் திகதி, மாலை நடாத்த ஏற்பாடாகி இருக்கின்றது. கடந்த 2006தொடக்கம் உலகக் கிண்ணத் தொடரை நடாத்தும் நாட்டின் அணி, முதல் போட்டியை விளையாடி வருகின்றது.

நெதர்லாந்து, இங்கிலாந்து, ஆர்ஜென்டீனா,பிரான்ஸ், ஸ்பெயின், ஜேர்மனி, பெல்ஜியம், குரோசியா, பிரேசில், போர்த்துக்கல் உட்பட மொத்தம் 32 அணிகள், இந்தப் போட்டிகளில் கலந்து கொள்கின்றன. சிறந்த ஓர் அணியான இத்தாலி, இரண்டாவது தடவையாக, இந்த விழாவில் கலந்து கொள்ளும் தகுதியை இழந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## தேசிய கீதத்திற்கு மதிப்பளிப்பு

போட்டி தொடங்கப்படுவதற்கு முன்பாக இரு நாட்டு தேசிய கீதங்களும் இசைக்கப்படும். இந்திய அணி ஜிம்பாப்வே நாட்டிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு அந்த அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில் விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையே ஆகஸ்ட் 19அன்று நடைபெற்ற முதல் ஒருநாள் போட்டியில் இந்திய அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. ஐபிஎல் தொடருக்குப் பிறகு முதல் முறையாக களத்திற்குத் திரும்பிய ராகுலுக்கு, இந்தப் போட்டியில் பேட்டிங் செய்ய வாய்ப்பு கிடைக்கவில்லை, ஆனால் போட்டி தொடங்குவதற்கு முன்பே அவர் ரசிகர்களைக் கவர்ந்துவிட்டார். போட்டி தொடங்கப்படுவதற்கு முன்பாக இரு நாட்டு தேசிய கீதங்களும் இசைக்கப்படும். இதற்காக இரு அணியினரும் அணிவகுத்து நின்றனர். அப்போது இந்தியாவின் தேசிய கீதம் தொடங்கும் முன், கே.எல்.ராகுல், தான் மென்று கொண்டு இருந்த சூயிங்கமை எடுத்து வெளியே வீசினார். தேசிய கீதத்திற்கு மதிப்பளிக்கும் நோக்கில் அவர் இந்த செயலை செய்தார்.



# சிரிக்க... சிந்திக்க...

## கடந்து போக....




















